ஆண்டு அறிக்கை

2022

இலங்கை போக்குவரத்துச் சபை

பொருளடக்கம்

1. **தொலைநோக்கு, பணி, இலக்குகளும் குறிக்கோள்களும்**

2. **அறிமுகம்**

3. **தலைவரின் செய்தி**

4. **செயற்திறனும் முன்னேற்ற மீளாய்வும்**

5. **நிதிக் கூற்றுக்கள்**

6. **கணக்காளர் தலைமையதிபதியின் அறிக்கை**

தொலை நோக்கு

பிராந்தியத்தின் அதி சிறந்த போக்குவரத்தாளர்

பணி

பொது மக்களுக்கு பாதுகாப்பான நம்பத்தகுந்த வசதியுள்ள வீதிப் பயணிப் போக்குவரத்துச் சேவையை நியாயமான கட்டண முறையின் கீழ் சேவை அரப்பணிப்புடன் செயலாற்றும் உற்பத்தி வளமிக்க பணியாளரின் மூலம் சகல வளங்களையும் உச்ச நிலையில் பயன்படுத்தி பெற்றுக் கொடுத்து பொருளாதார ரீதியில் சமநிலையை பேணும் நிறுவனமாக இயங்கல்.

இலக்குகளும் குறிக்கோள்களும்

1 12 பிராந்திய அலுவலகங்கள் மூலம் சாலைகளுக்கு அறிவுறுத்துரை வழங்கலும், தலைமை அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து வினைத்திறனுடைய போதுமான சிறந்த தரமுடைய பயனுடைய பஸ் சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

2 பாடசாலை செல்லும் சிறார்களுக்கு திருப்திகரமான பஸ் சேவைகளை அளித்தல்.

3 பண நோக்கங்களுக்காக தனியார் துறையினரால் செயலாற்றப்படாமல் அசட்டை செய்யப்பட்டுள்ள வருவாய் அற்ற பாதைகளில் பஸ் சேவைகளை அளித்தல்.

4 புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்கு பஸ் சேவைகளை அளித்தல்.

5 பொது தனியார் துறை போக்குவரத்து முகவர் நிலையங்களை இணைத்தல்.

6 விழாக்கள், விசேட வைபவங்கள், பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்கள், முதலிய தேவைகளுக்கு பஸ் சேவைகளை இணைத்தல்.

7 தபால்களையும் பத்திரிகைகளையும் பஸ்களில் ஏற்றிச் செல்லல்.

8 பஸ் செயலாற்றலுக்காக பொது திறைசேரி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாண சபைகள், உரிய அமைச்சுகள் அத்துடன் இதர தொடர்புடைய முகவர் நிலையங்கள் ஆகியவற்றுக்கும் பிராந்திய அலுவலகங்களுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்தல்.

9 இ.போ.ச சாரதிப் பயிற்சி பாடசாலைகளில் இருந்து நன்கு பயிற்றப்பட்ட ஒழுக்காற்றுடைய சாரதிகளை அளித்தல்.

10 சாரதிகளுக்கும் நடாத்துநர்களுக்கும் பொறிவலர்களுக்கும் மேற்பார்வை பணியாளர்களுக்கும் கருத்தரங்குகள், தொழிற் பாசறைகள் ஆகியவற்றை நடாத்துதல்.

11 பிராந்திய வேலைக்களங்களால் உற்பத்தி செய்யப்படும் அலகுகள் துணை அலகுகள் ஆகியவற்றை சாலைகளுக்கு அளித்தல்.

12 வயது வந்தோர்க்கும் பாடசாலை மாணவர்களுக்கும் கவர்ச்சிகரமான கழிவு விகிதங்களில் பருவகால சீட்டுக்களை அளித்தல்.

13 மாகாண வேலைக்களங்களுக்கு மிக முக்கிய மாற்றுறுப்புகளை வழங்குவதற்காக நாராஹேன்பிட்டி இபோச தலைமை அலுவலகத்தில் களஞ்சியத்தைப் பேணல்.

14 சாலைகளில் பஸ் செயலாற்றல் தொடர்பாக பாதுகாப்பு புலனாய்வுகள், சுற்றி வளைப்புகள், பரிசோதனைகளை நடாத்தல்.

அறிமுகம்

நாட்டின் பொருளாதார வளரச்சிக்கு போக்குவரத்தின் எல்லா அம்சங்களும் அவசியமானவை என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. இக்கூற்று வீதிப் பயணப் போக்குவரத்துக்கும் விதிவிலக்கல்ல. இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டில் கிராமங்களையும் நகரங்களையும் அதன் மூலம்முழு நாட்டையுமே இணைக்கும் முக்கிய பாத்திரத்தை பஸ் வண்டி வகிக்கிறது.

1957.10.31 ஆம் திகதி 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து அதிகார சட்டத்தின் பிரகாரம் நாடு முழுவதும் 80 பஸ் செயலாற்றுனர்களால் மொத்தமாக 1200 பாதைகளில் செயலாற்றப்பட்ட 3532 பதிவு செய்த பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டன. இதன் விளைவாக 1958.01.01 முதல் இலங்கை போக்குவரத்து சபை (இ.போ.ச) உருவாகியது.

அன்று முதல் 1977 ஆம் ஆண்டு வரை இ.போ.ச வீதிப் பயணப் போக்குவரத்தில் ஏக போக உரிமையை கொண்டிருந்தது. 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க போக்குவரத்து சட்டத்தின் மூலம் இ.போ.சபையுடன் இணைக்கப்பட்ட 10 பிராந்திய போக்குவரத்துச் சபைகள் 1978 ஆம் ஆண்டு இ.போ.ச வை பன்முகப்படுத்தியன் மூலம் உருவானது.

சிறிய அளவிலான அலகுகள் உள்ளூர் பிராந்திய தேவைகளுக்கும் உள்ளூர் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவான தீர்வு கண்டு பயணம் செய்யும் பொது மக்களுக்கு வினைத்திறனுடைய பயனுள்ள விளைவுகளை இ.போ.ச பன்முகப்படுத்துவதன் மூலம் அடையலாம் என அரசு கருதியது.

ஆயினும் இ.போ.ச தொடர்ந்து பெருவாரியான நட்டத்தில் இயங்கியமையினாலும் பொருளாதாரம் சுதந்திரமயமாக்கப்படல் வேண்டும் என்ற நவீன எண்ணக்கருவினால் உருவாகிய பயணத் தேவையை பூர்த்தி செய்ய முடியாமையாலும் வீதிப் பயணிப் போக்குவரத்துக்கு தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

பொதுத் துறையை மீள அமைக்கும் பணியில் ஒரு பகுதியாக இ.போ.ச மக்கள் மயமாக்கப்படுவதற்கென அடையாளம் காணப்பட்டது. அரசு தனியார்மயப்படுத்தலில் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தமையினால் அரசதுறை மீளவமைத்தலின் ஒரு அங்கமாக இ.போ.ச.வை மக்கள் மயமாக்கியது. அரச கூட்டுத்தாபனங்களையும் அல்லது அரசு உடைமையாக்கப்பட்ட வியாபார முயற்சிகளையும் பொது கம்பனிகளாக மாற்றும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அதிகார சட்டத்தின் கீழ் மக்கள் மயமாக்கள் இடம் பெற்றது.. மக்கள் மயப்படுத்தலின் போது இயங்கிய 93 போக்குவரத்து சாலைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறான வரையறுக்கப்பட்ட கம்பனிகளாயின.

ஊழியர் மத்தியில் கம்பனியின் மொத்தப் பங்குத் தொகையின் அரைவாசி விநியோகிக்கப்பட்டு மீதிப் பகுதியை பொதுத் திறைசேரி வைத்திருந்தது. இக் கம்பனிகளின் நிருவாகத்தை ஊழியர் மத்தியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை நடாத்தியது. மக்கள மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 1990 ஆம் ஆண்டில் தொடங்கி 1994ஆம் ஆண்டில் முடிவுற்றது. மக்கள் மயமாக்கல் ஏனோ தானோ என்ற முறையில் செயற்படுத்தப்பட்டமையினால் விரும்பிய விளைவுகளை அடைய முடியவில்லை.

எனவே 1977 ஆம் ஆண்டு 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் திருத்தம் மூலம் மேற்குறிப்பிட்ட கம்பனிகள் இணைக்கப்பட்டு கொத்தணி பஸ் கம்பனிகளாக மாற்றப்பட்டன. மேலதிகமான பணியாளர், ஒழுக்காற்றில் பெருவீழ்ச்சி, நியாயமற்ற போட்டி, பாடசாலைச் சேவைகள், இலாபமற்ற சேவை செயலாற்றல் போன்ற சமூகக் கடப்பாடுகள்,

தொழில் துறை அறிவுடையோர் தட்டுப்பாடு, வினைத்திறன் இன்மை, செயலாற்று செலவுகளில் உயர்ச்சி, அரசியல் தொழிற்சங்க முறையற்ற தலையீடு, கட்டுமீறிய ஊழல் ஆகியன கொத்தணி பஸ்கம்பனிகள் வீழ்ச்சியடைவிற்கு உரிய காரணங்கள் ஆகும்.

மேற்குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு 2005 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் 2005.10.19 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்து சபை தாபிக்கப்பட்டது.

தலைவரின் செய்தி

2022 ஆம் ஆண்டின் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் (இபோச) ஆண்டு அறிக்கையை உயர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் நான் பெரிதும் உவகை எய்துகிறேன். பரிசீலனையிலுள்ள ஆண்டில் நான் தலைவராக இருக்காவிடினும் 2022ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைக்கு செய்தி விடுப்பதற்கு நான் கடப்பாடு உடையேன்.

தற்போது செயலாற்றலுக்கு இபோசவிடம் 6200 பஸ்களடங்கிய அணி உள்ளது. ஆயினும் 2022ஆம் ஆண்டளவில் இத்தொகை 5220 ஆகக் குறைந்தது. அதாவது ஏறத்தாழ 1000 பஸ்கள் சிறிய, பாரிய அளவிலான பழுதுபார்த்தல் காரணமாகவும் நிரப்பப்படாமலுள்ள சாரதிகள்/நடாத்துநர் பதவிகட்கான வெற்றிடங்களினாலும் செயலாற்றப்படாதிருந்தன. தற்போது இ.போ.ச அணியிலுள்ள பஸ்களில் ஏறத்தாழ 50% பத்தாண்டுகளைக் கடந்தவையாகும். இதனால் அடிக்கடி பழுது பார்தல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. 2019ஆம் ஆண்டு இ.போ.ச இலாபத்தில் இயங்கும் நிறுவகமாகவிருந்த போதும், இலங்கையில் ஏற்பட்ட உலகளாவிய ரீதியில் பரவிய கொவிட்-19 நோய் காரணமாக 2020 / 2021 ஆம் ஆண்டில் இ.போ.ச நட்டத்தில் இயங்கும் நிறுவகமாகத் தரங்குன்றியது. இருப்பினும், 2022ஆம்ஆண்டில் 4288 பஸ்கள் தினமும் சராசரியாக செயலாற்றப்பட்டன. இப் பஸ்கள் மொத்தமாக செயலாற்றிய தூரம் 346.8 மில்லியன் கிலோமீற்றர்கள் ஆகவிருந்தது. 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது புள்ளியியல் ரீதியாக 39.09% அதிகரிப்பு என்பதுடன் பயணத்தூர அதிகரிப்பு 99 மில்லியன் கிலோமீற்றராகும்.

2022ஆம் ஆண்டுக்குரிய புரள்வு 66,350.10 மில்லியன் ரூபாவாகும். வழிப்பட்டியல் வருவாய் 54,956.78 மில்லியன் ரூபாவாகும். இதர வருவாய்கள் சேர்க்கப்படும் போது மொத்த வருவாய் 70,439.27 மில்லியன் ரூபாவாகும். அதற்கேற்ப 2022ஆம் ஆண்டுக்குரிய தொழிற்பாட்டு இலாபம் 484.21 மில்லியன் ரூபாவாகும். இதுநிகர இலாபமாகும். பாடசாலைச் சிறார்களுக்கு வழங்கப்படும் பருவகாலச் சீட்டுகட்கு பயணக் கட்டணத்தின் 7% அறிவிடப்படுகிறது. 93% தொடர்ச்சியாக பொதுத் திறைசேரியினால் சமூகநல ஏற்பாடாக அளிக்கப்படுகிறதாயினும், 2022 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் அளிக்கப்படாத தொகையாக 7,688.3 மில்லியன் ரூபா இன்னமும் மீதியாக உள்ளது. சபையின் நிதிச் செயற்றிறனிலும் முன்னேற்றத்திலும் இதுநேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

2022ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் பஸ் புனருத்தாரணத்திற்கு 750 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பினும், 606 மில்லியன் ரூபா மட்டுமே செலவிடக் கூடியதாயிருந்தது. வினியோகச் சங்கிலியில் சரிவேற்படக் காரணங்கள் மாற்றுறுப்புகள் சந்தையில் பற்றாக்குறை, சில வழங்கல்களில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிப்பு, வழங்குநர்கள் கடனுறுதிக் கடிதம் ஆரம்பிப்பதில் கடும் தடைகள் ஆகியனவாகும். இருப்பினும், பஸ் புனருத்தாரணத்திற்கு செலவிட்ட தொகையில் 234 எஞ்சின்களும், 136 கியர்ப் பெட்டிகளும், 150 பஸ் உடற்கோப்புகளும் பழுதுபார்க்கப்பட்டதுடன், 2023 ஜனவரியில் மேலும் 852 பஸ்கள் பழுது பார்த்தலுக்காக காத்திருந்தன.

2022 மார்ச் மாதத்தில் நாட்டில் நிலவிய போராட்டமும் பொருளாதார நெருக்கடியும் பஸ் செயலாற்றலில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன். இபோச அதன் வருவாயில் குறிப்பிடத்தக்களவு வருவாயை இழந்ததுடன் இபோச திட்டமிட்ட பல்வேறு முயற்சிகள் பூர்த்தி செய்யப்படும் வாய்ப்பையும் இழக்கச் செய்தது. இருப்பினும் 2023 ஆம்ஆண்டின் ஆரம்பத்தில் நாளென்றுக்கு சேவைக்கு அளிக்கப்படக்கூடிய 5,200 பஸ்களில் 4800 பஸ்களைச் செயலாற்றத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் நாளாந்த வழிப்பட்டியல் வருவாய் 155 மில்லியன் ரூபா ஈட்டுதல், 2023ஆம் ஆண்டு இலக்கை எய்துவதற்கு நேர்மறை அடையாளங்களாய் விளங்குகின்றன. அங்ஙனமே இந்திய உதவித் திட்டத்தின் கீழ் 32 ஆசனங்கள் கொண்ட 500 பஸ்கள் பெற்றுக் கொண்டமை, வெற்றிடங்களாக உள்ள 800 சாரதிகள், 280 நடாத்துநர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கு அரசிடமிருந்து அனுமதி பெற்றுக் கொண்டமை ஆகியனவும் 2023 வருமான இலக்குகளை ஈட்ட வழிசெய்யும்.

2023 ஆம் ஆண்டில் இபோச சவால்களை எதிர்கொள்ளவும் புதிய சாதனை இலக்குகளை எய்தவும் வேண்டியுள்ளது. அதில் முதன்மையானது ஊழல்களையும் முறைகேடுகளையும் ஒழித்தல், வெளிப்படையான பெறுகை செயல் முறை மூலம் வினியோகச் சங்கிலி முறையைப் பலப்படுத்தல், உல்லாச, மின்சார பஸ் செயலாற்றலைத் தொடங்குவதன் மூலம் போக்குவரத்துச் சேவைகளை நவீனமயப்படுத்தல், செலவுக் கட்டுப்பாடு, சிசுசறிய கிராமிய பயணிப் போக்குவரத்துச் சேவைகளை விஸ்தரித்தல், சுற்றுலா, சரக்கு போக்குவரத்துச் சேவைகள் போன்றவருமான மீட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல் ஆகியனவாகும். திறைசேரி, போக்குவரத்து அமைச்சு, இபோச கூட்டிணைந்து கைச்சாத்திட்ட நிறுவன நோக்க அறிக்கையின் நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். இவையாவற்றையும் அடையும் விதத்தில் திட்டமிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் அபிலாஷைகளான மேற்குறிப்பிடப்பட்டவற்றை வினைத்திறனுடனும் பயன்படும் விதத்திலும்

நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட மூலோபாய அணுகுமுறைகளை விரைவில் ஆரம்பித்தல் அவசியமாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடான போக்குவரத்துத்துறை வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது இபோசவின் போக்குவரத்துத்துறை வளர்ச்சி மந்தகதியிலேயே உள்ளது என்பதைக் கருத்திற் கொண்டு ஆகக்குறைந்தது 2030 ஆம் ஆண்டளவிலாவது பயணிக்கவேண்டிய பாதையை நன்கு திட்டமிட்டு படிப்படியாக செயற்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும்.

2022ஆம்ஆண்டில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சகல முயற்சிகளிலும் எனக்கு மதியுரை வழங்கியும் வழிகாட்டியும் உறுதுணையாயுமிருந்த மாண்புமிகு போக்குவரத்து அமைச்சருக்கும், மாண்புமிகு இராஜாங்க அமைச்சருக்கும், அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும், திறைசேரி அலுவலர்கட்கும், சபையின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் எய்துவதில் தம்மை அர்ப்பணித்துச் சேவைபுரியும் சகல ஊழியர்கட்கும் பணிப்பாளர் சபைக்கும் அவர்களின் பங்களிப்பிற்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், 2023ஆம் ஆண்டின் இலக்குகளை எய்த தொடர்ந்தும் அவர்களின் ஆதரவை எதிர்பார்க்கிறேன்.

எஸ்.எம்.டீ.எல்.கே.த அல்விஸ்
தலைவர்
இலங்கை போக்குவரத்துச் சபை

செயலாற்றுப்பகுதி

01. 2022 ஆம் ஆண்டு செயலாற்றலுக்கு நாளொன்றுக்கு அளிக்கப்பட்ட சராசரி பஸ் தொகை 4,933 ஆகும். செயலாற்றிய பஸ்களின் தொகை நாளொன்றுக்கு சராசரி 4269 ஆகும். நாளொன்றுக்கு செயலாற்றிய சராசரி கிலோ மீற்றர் தொகை ஏறத்தாழ 0.96 மில்லியனாகும். நாளொன்றுக்கு சராசரி வழிப்பட்டியல் வருவாய் ரூ 147 மில்லியனாகும். கிலோ மீற்றரொன்றுக்கான வருவாய் ரூ 153.70.
02. இ.போ.சபையால் அளிக்கப்படும் விடியற்காலை, பிந்திய இரவு நேர பஸ்பயணங்கள் பலப்படுத்தப்பட்டு பயணிகளின் தேவைக்கேற்ப அதிகரிக்கும் வண்ணம் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.
03. இ.போ.சபையால் புகையிரத இணைப்புச் சேவையை மேம்படுத்தும் முகமாக பயணிகளின் தேவைக்கேற் புகையிரத நிலையங்களிலிருந்து புறப்படும் சேவைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கும் புதிய சேவைகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
04. "சிசுசறிய" திட்டத்தின்கீழ் 741 சிசுசறிய பஸ் சேவைகள்வரை செயலாற்றக் கூடியவாறு உள்ளதுடன், எதிர்காலத்தில் பாடசாலைகளினதும் மாணவர்களினதும் தேவையையும் வேண்டுகோள்களையும் கருத்திற்கொண்டு இச்சேவைகளைப் பலப்படுத்தி விரிவுபடுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
05. சகலபஸ்களிலும் இலத்திரனியல் பயணச்சீட்டு இயந்திரங்களை உபயோகிப்பதன் மூலம் பயணிகட்கு அளிக்கப்படும் சேவையின் வினைத்திறனையும் உற்பத்தி வளத்தையும் உயர்த்த முடிந்துள்ளது.
06. பயணிகளின் நலன்கருதி இணைத்தளம் மூலமாக ஆசன ஒதுக்கீடு செய்யும் வகையில் 550 பஸ்கள் வரை மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் ஆசன ஒதுக்கீடு செய்யும் 31 பீடங்கள் தொடங்கப்பட்டுள்ளன. 2023ஆம் ஆண்டில் இச் சேவையை மேலும் மேம்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இ.போ.சவினால் சமூகநலனுக்குப் பங்களிப்பு

விடியற் காலையிலும் பிந்திய இரவு நேரங்களிலும் இறுதிப் பயணங்கள் செயலாற்றல்

விடியற் காலையிலும், பிந்திய இரவு நேரங்களிலும் இறுதிப் பயணங்களை ஏற்பாடு செய்வதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு கிராமிய பணியாளர்களின் போக்குவரத்திற்கு நேரடியாகப் பங்களிப்பினும் நெடுங்காலமாக இதனால் கிட்டுவது நல்லெண்ணம் மாத்திரமேயாகும். ஆயினும் இ.போ.ச ஆற்றுகின்ற மற்றுமோர் சமூக கடமையெனக்கருதி இச்சேவைகள் பயணஞ் செய்யும் பொதுமக்களுக்காக தொடர்ந்தும் செயலாற்றப்படுகின்றன.

கிராமியப் பிரதேசங்களில் பஸ் செயலாற்றல்

கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முகமாக கிராமங்களையும் நகரங்களையும் இணைக்கும் முக்கிய போக்குவரத்து ஊடகமாக நேரடிப் பங்களிப்பை வழங்கிவருவது இ.போ.சபையேயாகும். பயணிகளின் தேவைகளைக் கருத்திற் கொண்டு இச்சேவைகளைத் தொடர்ச்சியாக அளிப்பதற்கு எப்போதும் நடவடிக்கை எடுப்பதுடன் எதிர்காலத்தில் புதியபஸ்களை கொள்வனவு செய்து இச்சேவைகளைத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் இச்சேவைகளை மேம்படுத்தும் திட்டங்கள் தீட்டப்படுவது எதனாலென்றால் கிராமிய பொருளாதார வளர்ச்சிக்கு கிராமப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது ஒரு காரணக் கூறாக இருப்பதனாலாகும்.

பாடசாலை பஸ் சேவைகள் செயலாற்றல்

இ.போ.சபை எதிர்கால சந்ததியைக் கருத்திற் கொண்டு பாடசாலை மாணவர்களின் போக்குவரத்திற்கு பிரமாண்டமான சேவையாற்றி வருகிறது. பயணிகள் தேவைகளிற்கேற்ப நீண்டகாலத்திற்கு உயர்ந்த இலாபமீட்டக்கூடிய சந்தரப்பங்களைப் பயன்படுத்தாது, எதிர்கால சந்ததியினரின் நன்மையைக்கருத்திற் கொண்டு உரிய நேரத்திற்கு பிள்ளைகள் பாடசாலைகட்குக் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக மீண்டும் வீட்டுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

செயலகப் பகுதி

2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக்கூட்டங்கள்

2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பணிப்பாளர்சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை

01 ஆம்கூட்டம் - 2022.01.20

02 ஆம்கூட்டம் - 2022.02.23

03 ஆம்கூட்டம் - 2022.03.25

04 ஆம்கூட்டம் - 2022.04.08

05 ஆம்கூட்டம் - 2022.05.05

06 ஆம்கூட்டம் - 2022.06.02

07 ஆம்கூட்டம் - 2022.07.22

08 ஆம்கூட்டம் - 2022.08.19

09 ஆம்கூட்டம் - 2022.11.02

10 ஆம்கூட்டம் - 2022.11.16

2022 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை 10 ஆகும்.

இலங்கை போக்குவரத்துசபையின் மேற்குறித்த பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்துவது தொடர்பான நடவடிக்கைகள்.

1. பணிப்பாளர் சபைக்கூட்டம் நடைபெறவிருக்கும் தினத்தை குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் சகல உறுப்பினர்களுக்கும் இ.போ.சபகுதி / பிரிவு தலைவர்கட்கும் அறிவித்தல் விடுத்தல்.
2. சபை விஞ்ஞாபனங்களை பொறுப்பேற்று விஞ்ஞாபன இலக்கத்தை இட்டுபதிவுசெய்ததன் பின்னர் கோவை தயாரித்து பணிப்பாளர்சபை உறுப்பினர்களிடம் கையளித்தல்.
3. பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் பணிப்பாளர்சபை விஞ்ஞாபனங்களுடன் தொடர்புடைய சுற்றறிக்கை கடிதங்களை குறிப்பிட்டு பணிப்பாளர் சபையின் கூட்ட நிகழ்ச்சிநிரலை தயாரித்தல்.
4. நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவும் தலைவரின் அறிவுறுத்தலின் பேரிலும் பணிப்பாளர்சபை விஞ்ஞாபனங்களையும் சுற்றறிக்கைக் கடிதங்களையும் சமர்ப்பித்தல்.
5. அவ்வந்த பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்துக்கும் சுற்றறிக்கை கடிதத்துக்கும் தொடர்பாக பணிப்பாளர்சபை அளிக்கும் தீர்மானங்களையும் இடை நேர்விளைவான தீர்மானங்களையும் சரியாக அறிக்கையிட்டு பணிப்பாளர்சபை தீர்மானங்களை விடய இலக்கத்திற் கேற்ப தயாரித்தல்.
6. அவ்வாறு குறிப்பிட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானங்களுக்கு பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்ற பின்னர், தீர்மானங்களில் தனிப்பட்ட தேர்வு செய்யப்பட்ட பகுதிளைப் பிரித்தெடுத்து உரிய இ.போ.சபகுதித் தலைவர்கள் / பிரிவுத்தலைவர்களுக்கு அனுப்புதல்.
7. இந்நடவடிக்கைகள் யாவும் சரியாகவும் அந்தரங்கமாகவும் முறையாகவும் நிறைவேற்றப்படுதல்.
8. இ.போ.ச பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் பணிப்பாளர்சபைக் கூட்டங்களுக்கு அழைக்கப்படும் பகுதி / பிரிவுத்தலைவர்கட்கும் உபசரணை அளித்தல்.
9. பணிப்பாளர்சபைக் கூட்டங்களில் பங்குபற்றும் (இ.போ.ச அலுவலர்கள் அல்லாதோருக்கு) பணிப்பாளர்சபை உறுப்பினர்களுக்கு கூட்டத்தில் பங்குபற்றுவதற்கானஅமர்வுப்படி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
10. பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றும் (இ.போ.ச அலுவலர் அல்லாதோர்) பணிப்பாளர்சபை உறுப்பினர்களுக்கு போக்குவரத்துப்படி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காணிச் சொத்துக்கள் தொடர்பான நடவடிக்கைகளை நிறைவேற்றல்

1. அரசிற்குச் சொந்தமான இடமான இபோச ஷாலிகா விளையாட்டரங்கும் வரவேற்பு மண்டபமும் அமைந்துள்ள அண்டர்சன் கொல்வ் லிங் மைதானம் எனப் பெயர் கொண்ட காணி, அரச காணி கையகப்படுத்தும் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு அமைச்சரவை தீர்மானத்திற்கேற்ப இலவச கொடைப் பத்திரம் மூலம் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்வேளை அமைச்சரவைத் தீர்மானத்திற்கேற்ப அரசிற்கு செலுத்த வேண்டியுள்ள 1966ஆம் ஆண்டின் மேம்படுத்தப்படாத மதிப்பீட்டுப் பெறுமதியான 3,271,345/= ரூபா இபோச பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கிணங்க மக்கள் வங்கி யூனியன் பிளேஸ் கிளை 2022.03.31 ஆந்திகதிய 173026 இலக்க காசோலை மூலம் திம்பிரிகஸ்யாய பிரசேத செயலாளருக்குச் செலுத்தப்பட்டது. இதன் பொருட்டு R829515ஆம் இலக்க 2022/04/29ஆந் திகதிய பணம் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டு திம்பிரிகஸ்யாய பிரதேச அலுவலகத்தால் வழங்கப்பட்டது.

   இதற்கேற்ப திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தால் கோப்பு பூரணப்படுத்தப்பட்டு காணித் தலையைதிபதிக்கு அனுப்பப்பட்டது. தற்போது உரிய இலவச கொடைப் பத்திரம் காணித் தலைமையதிபதியின் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

2. இபோச தலைமையலுவலகம் அமைந்துள்ள இல.200 கிருல வீதி வளவுக்காக 2022ஆம் ஆண்டுக்கு கொழும்பு மாநகர சபைக்குச் செலுத்தவேண்டிய மதிப்பீட்டுக் கட்டணம் நட்டஈட்டுத் தொகையான 1,524,600/= ரூபா 160242 இலக்க 2022/01/07ஆந் திகதிய மக்கள் வங்கிக் காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

3. இலங்கைப் போக்குவரத்து சபை தலைமை அலுவலகம் அமைந்துள்ள அரச காணிக்காக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளருக்குச் செலுத்த வேண்டிய ஆண்டு வரியான 15,000/= ரூபா மக்கள் வங்கி யூனியன் பிளேஸ் கிளையின் 2022/08/17ஆந் திகதிய 197173 ஆம் இலக்க காசோலை மூலம் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரின் அலுவலகத்தின் R829677ஆம் இலக்க 2022/09/23ஆந் திகதிய பணம் பெற்றுக்கொண்டமைக்கான பற்றுச்சீட்டு அளிக்கப்பட்டது.

4. இலங்கைப் போக்குவரத்து சபையின் ஏக்கலை வேலைக்களம் அமைந்துள்ள காணிக்காக அமைச்சரவைத் தீர்மானத்திற்கேற்ப இலவச கொடைப் பத்திரம் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகள் காணிகள் தலைமையதிபதி அலுவலகம் மூலம் நடைபெறுவதுடன் இலவச கொடை அளிக்கும் பத்திரம் தயாரிக்கப்பட்டு காணி அமைச்சினால் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதென, இதன் முன்னேற்றம் பற்றி வினவியபோது தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

5. தரணியகல சாலை அமைந்துள்ள காணி, காணி சீர்த்திருத்த ஆணைக்குழு மூலம் விற்பனையாளர் மூலம் பெறுவதற்கு உரிய சகல கொடுப்பனவுகளும் செய்யப்பட்டுள்ளதுடன், அக்காணிக்குரிய உறுதியை உரிய காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6. இபோச வசமுள்ள காணிகளிற்கு தெளிவான சொத்துவத்தை பெறுவதற்காக பிரசேத செயலகங்களுடன் தொடர்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கேற்ப அம்பலாங்கொடை இபோச சாலைக்குரிய காணி கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் உடைமையாக்கற் சான்றிதழ் பெறுவதற்காக அம்பலாங்கொடை பிரதேச செயலாளர் அலுவலகம், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு, சுற்றுலா மற்றும் காணி அமைச்சு ஆகியவற்றுடன் அமைச்சு மட்டத்தில் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

7. நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து இபோசவிற்குக் கிடைக்கவேண்டிய பணத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மகரகமை நகர அபிவிருத்திகாக 2004ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகாரச பையினால் சொத்துவம் பொறுப்பேற்ற காணித்துண்டு உட்பட (இபோச மகரகமை சாலைக்கு முன்னால் அமைந்துள்ள) தகனம் கலேவத்த என்ற பெயருடைய 3 துண்டுகள் அடங்கிய காணிக்கு இபோசவிற்குக் கிடைக்கவேண்டிய நட்டஈடு 112 மில்லியன் ரூபா மகரகமை பிரதேச செயலாளரிடமிருந்தும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் அறவிடுவதற்காக 2022/06/15ஆந் திகதி சுற்றுலா மற்றும் காணி அமைச்சில், அமைச்சர் மட்டத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கேற்ப நட்டஈடு செலுத்தவேண்டிய பகுதியனரான நகர அபிவிருத்தி அதிகார சபையாலும் மகரமை பிரதேச செயலாளரினாலும் பொறுப்பு கையேற்றப்பட்டது. அதற்கேற்ப நட்டஈடு செலுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

8. இலங்கை இராணுவ தலைமையக நிருமாணம் தொடர்பாக இபோச தலங்கமைச் சாலைக் காணியில் 05 ஏக்கர் பெறுவதற்கு பாதுகாப்பு அமைச்சினால், முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பினும், இபோச செயலகப் பகுதயின் கடும் அர்ப்பணிப்பினால் அச் சாலைக் காணியைத் தொடர்ந்தும் இபோச வசம் வைத்திருக்க முடிந்தது. அதேபோன்று இச் சாலைக் காணியைக் கையகப்படுத்த உரிய ஆவணங்கள் கடுவெல பிரதேச அலுவலகத்தில் இன்மையால் பெருமுயற்சி மேற்கொண்டு உரிய கோப்பு தயாரிக்கப்பட்டு 44ஆம் பிரிவின் கீழ் உடைமையாக்கற் சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் நிருவாக கட்டடத் தொகுதிகள் நிருமாணிப்பதற்காக காணி கையகப்படுத்துவதற்காக காணி கையகப்படுத்தும் சட்டடத்தின் 38(அ) பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரித்த 4.5 ஏக்கர் (1.0984 ஹெக்டேயர்) அளவிலான இபோச சாலைக் காணியின் உரிய துண்டை மீள உடைமையாக்குவதற்காக உரிய வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டது.

9. 2004/12/026ஆந் திகதி சுனாமி அலைகளால் அழிந்தொழிந்த அப்போதிருந்தத பெற்றிகலவத்தை வேலைக்களம் அமைந்துள்ள காணி 2009ஆம் அண்டில் அமைச்சரவைத் தீர்மானத்திற்கேற்ப தொழில்சார், தொழினுட்ப பயிற்சி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க வியாபார முகாமைத்துவ நிறுவனம் (NISM) காணிக் கிளையை நிறுவுவதற்காக பெற்றிருந்தது. அக்காணி தொடர்பான இபோச சொத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான விவரங்கள் சமர்ப்பிக்கப்படும்போது அக்காணி அரசிற்குச் சொந்தமான அன்றேல் இபோசவிற்குச் சொந்தமான காணியாவென்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்தது.

அதற்கேற்ப 2007ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக விவரங்கள் சமர்ப்பித்து இக்காணி 1957ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் இபோசவிற்கு உரித்தான காணியென எம்மால் சுட்டிக்காட்டப்பட்டதின் பின்னர் 2022/03/14ஆந் திகதி காணி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இறுதியாக இக் காணி இபோசவிற்கு சொந்தமானதென சுட்டிக்காட்டிய பின்னர் உரித்தளித்து காணியின் மதிப்பீட்டு பெறுமதியான 35,000,000/= மில்லியன் ரூபா பெற்றுக்கொள்வதற்காக இறுதித் தடவையாக 2022/07/22ஆந் திகதி நடைபெற்ற இபோச பணிப்பாளர் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொண்டு மேல் நடவடிக்கைக்காக இபோச சட்டப் பகுதி மூலம் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்திற்கு சகல ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

அதற்கேற்ப, உரித்தளிக்கும் உறுதி தயாரித்து இபோசவிற்குக் கிடைக்கவேண்டிய 35,000,00/= ரூபா எதிர்பார்க்கப்படுகிறது.

10. தலாத்துஓயா முதுனகடையில் அமைந்துள்ள இபோச தலத்துஓய காணி 2007ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையினருக்கு சொந்தமாக கையளிக்கப்பட்ட பின்னர் இபோசபைக்கு கிடைக்கவேண்டிய உரிய சொத்திற்கான மதிப்பீட்டுப் பெறுமதியான 33,936,000/= ரூபாவைப் பெறுவதற்காக தொடர்ச்சியாக விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தற்போது காணித் தலைமையதிபதியின் அலுவலகத்திற்கு மேல் நடவடிக்கைக்காக சகல தகவல்களும்

சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப காணித் தலைமையதிபதி அலுவலகத்தின் அறிவுறுத்துகையின் பேரில் மேலதிக நடவடிக்கைகள் தொடர்கின்றன.

11. இபோச மொனரகலைச் சாலை அமைந்துள்ள காணி, காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 05 ஏக். 01 றூட் 17 பேர்ச்சில் விஸ்தீரணமுள்ள குமாரவத்தை எனும் பெயருடைய காணி இபோசவிற்குத் தொடர்புடையதாதலால் காணிச சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய பணமான கொடுக்கல் வாங்கல் கட்டணமும் மதிப்பீட்டு மற்றும் சேவை கட்டணம் SSCL 2.5% சேர்த்த பெறுமதி மீதான 15% வரியும் கட்டணமாக மக்கள் வங்கி யூனியன் பிளேஸ் கிளையின் 2022/11/11ஆந் திகதியிட்ட 212488, 21487 இலக்கங்கள் கொண்ட காசோலைகள் மூலம் முறையே 385,000/= ரூபாவிற்கும் ரூபா 285,749.92 பெறுமதியுடைய காசோலைகள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், இக்காணியின் உறுதியைப் பெறுவதற்காக மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள வருகின்றன.

12. 2022/10/10ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு இலங்கைப் போக்குவரத்துச்சபை வசம் உள்ள காணிகளின் சொத்துரிமையை உறுதிப்படுத்துவதற்காக அமைச்சரவையின் அனுமதி கோரி அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதுடன் அவ்வமைச்சரவை அனுமதிப் பிரகாரம் காணி உரிமைகளை தெளிவாக்குவதற்கு அவசிய உறுதி இலவச கொடைப் பத்திரங்கள் உட்பட்ட காணிச் சொத்துவத்தை தெளிவாக்குவதற்கான ஆவணங்களைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

13. மொனராகலை சாலைக்கான உறுதி பெறப்பட்டமையால் அவ்வுறுதியைப் பெறுவதற்காக 2022/3/03 ஆந் திகதி கடிதம் அனுப்பப்பட்டதுடன், மேலும் இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு 55ஆம் இலக்க சபைப்பத்திரம் மூலம் அறிக்கையிட்டு அதன் தீர்மானத்திற்கேற்ப உறதி பெறுவதற்காக காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு 2022/06/06ஆந் திகதியிட்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அங்ஙனமிருக்கையில் 2022/10/13ஆந் திகதியிட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நட்ட ஈட்டுக்கொடுப்பனவு தொடர்பாக அனுப்பப்பட்ட வேண்டுகோளுக்காக 2022/11/02 ஆந் திகதி இபோச பணிப்பாளர் சபைக்கு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு சபைத் தீர்மானத்தின் பிரகாரம் காட்டப்பட்ட 2022/11/06ஆந் திகதியிட்ட கடிதத்திற்கேற்ப பணம் செலுத்தும் நடவடிக்கை நடைபெறுகிறது. பணஞ் செலுத்தப்பட்ட பின்னர் காணிக்கு உரிய உறுதிக் கட்டணம் செலுத்தி உறுதியைப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

14. இபோச வெள்ளவாய சாலைக் காணி அளவீடு செய்யப்பட்டு வரைபடமிடப்பட்டு அதற்கேற்ப வரைபடம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

15. இபோச கொத்மலைச் சாலைக் காணி தொடர்பாக இபோச பணிப்பாளர் சபைக்கு விவரங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப பிரதேச செயலாளருக்கு உறுதி பெறுவதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டு அதற்கேற்ப அளவீடு செய்யப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. உறுதி பெறுவதற்காக பிரதேச செயலாளருக்கு ஊடாக காணி கையகப்படுத்தும் அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவரிடமிருந்து அறிவுறுத்துகை பெற்று உறுதிபெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

16. நுவரெலியா பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள காணிக்கு 44ஆந் பிரிவின் கீழ் உடைமையாக்கற் சான்றிதழ் இல்லாமையால், உடைமையாக்கற் சான்றிதழ் பெறுதல் தொடர்பாக பூணர அறிக்கை 2022/03/15ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்கேற்ப பிராந்திய செயலாளர் மூலம் காணி அமைச்சின் செயலாளருக்கு அது தொடர்பான அறிவுறுத்துகை கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வறிவுறுத்துமைக்கேற்ப உடைமையாக்கற் சான்றிதழ் பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

17. இபோச வலப்பனைச் சாலைக் காணிக்கு 44ஆம் பிரிவின் கழ் உடைமையாக்கற் சான்றிதழ் பெறுவதற்காக பிராந்திய செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக பிராந்திய செயலாளருக்கு நட்டஈட்டுப் பணம் இபோச மூலம் செலுத்தி முடிக்கப்பட்டாயிற்றாயினும், 10ஆம் பிரிவின் கீழ் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு நட்டஈட்டுப் பணம் கிடைக்கப் பெறவில்லையாதலால், அது தொடர்பான பிணக்கைத் தீர்ப்பதற்காக காணி அமைச்சின் காணி கையகப்படுத்துவதற்கான அறிவுறுத்துலகை கடிதம் அனுப்பபட்டுள்ளது. அவ்வறிவுறுத்துகைப் பிரகாரம் இபோசவிற்கு சொத்துவம் உறுதிப்படுத்தி பெற முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

18. வலப்பனை பஸ் நிறுத்துமிடம் தொடர்பாக சொத்துவம் பெறுவதற்காக 2021/11/22ஆந் திகதியிட்டு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வேண்டுகோள் தொடர்பில் இதுவரை காணிச் சீர்திருத்த ஆணைக்குழு பதில் எதுவும் அனுப்பவில்லை. உறுதி பெறுவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

19. வெலிஓயா பஸ் நிறுத்துமிடத்திற்காக பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்ட வேண்டுகோள் தொடர்பில், அறிவுறுத்துகை கோரி, காணி ஆணையாளருக்கு பிரதேச செயலாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டள்ளது. இதற்கான 44ஆந் பிரிவின் கீழான உடைமையாக்கற் சான்றிதழ் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

20. தனமல்வில சாலைக்கு உடைமையாக்கற் சான்றிதழ் பெறுவதற்கு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், உரித்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

21. மஸ்கெலிய பஸ் நிலையத்திற்கு விசேட கொடைப் பத்திரம் இபோசவிற்கு அளிப்பதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டு மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

22. இபோச பாகொடபிற்றக் கோட்டை பஸ் நிலைய காணிக்கான உடைமையாக்கற் சான்றிதழ் பெறுவதற்காக பிரதேச செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டு அதற்கேற்ப இபோச கோப்புகளிலிருந்து விவரங்கள் சமர்ப்பிப்பதற்காக பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு காணிக் கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

23. இபோச மதவாச்சி மாகாண வேலைத்தளத்தினதும் உத்தியோகபூர்வ கட்டிடத் தொகுதியினதும் சொத்துவம் உறுதிப்படுத்தப்படுவதற்கான சான்றிதழ் பெறுவதற்காக பிரதேச செயலாளரின் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

24. அம்பாறைச் சாலைக் காணிக்கான சொத்துவம் பெறுவதற்காக பிரதேச செயலாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

25. மகியங்கின அலுவலக் காணிக்கான சொத்துவம் பெறுவதற்குத் தேவையான கடிதங்கள் அனுப்பட்டுள்ளதுடன் அதற்கேற்ப பிரதேச செயலாளரின் கடிதம் கிடைத்துள்ளது. மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது.

26. குருணாகலை வடக்கு சாலைக் காணிக்காக பிரதேச செயலாளரிடம் சட்டரீதியான சொத்துவம் பெற்றுத் தருமாறு கோரப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைக்கு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

27. மாஹோ பஸ் நிலையம் தொடர்பாக உடைமையாக்கற் சான்றிதழ் கோரி பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

28. குருணாகலை தெற்கு சாலைக் காணி 3 துண்டு காணியாக உள்ளதுடன் முதலாவது துண்டு மக்கள் மயத்தில் பெற்ற ஆதனமாகும். இக்காணி கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் பெற்ற காணித்துண்டுகள் இரண்டிற்கும் வெவ்வேறு பிரதேச செயலாளருக்கு 44 ஆம் பிரிவின் கீழ் உரித்துடைமை சான்றிதழ் பெற்றுத்தருமாறு விவரங்களுடன் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன.

29. புத்தளம் சாலைக்கு காணிக்கு உரித்துடைமைச் சான்றிதழ் பெற்றுள்ள 4 ஏக்கர் காணிக்கு 44 ஆம் பிரிவின்கீழ் உரித்துடைமைச் சான்றிதழ் அளிக்குமாறு பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

30. களுத்துறை சாலை விஸ்தரிப்பதற்காகப் பெறப்பட்ட 4 ஏக்கர் காணித்துண்டுக்கு 44 ஆம் பிரிவின் கீழ் உரித்துடைமை சான்றிதழ் பெற்றுத்தருமாறு பிரதேச செயலாளரிடம் வேண்கோள் விடுக்கப்பட்டது.

31. களுத்துறை சாரதிப் பயிற்சிப் பாடசாலைக் காணி அளவீடு செய்யப்பட்டு வரைபடம் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன். நட்டஈட்டுப்பணம் செலுத்தப்பட்டதென உறுதிப்படுத்தப்பட்டால் அதை நிட்சயமாக உறுதிப்படுத்துவதற்கான பற்றுச்சீட்டு இன்மையால் உறுதி பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், மீண்டும் காணி ஆணைச் சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்கு உறுதிபெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

32. பாணந்துறை பஸ்நிலையக் காணிக்கு பாணந்துறை நீதிமன்றத்தில் 2225P வழக்கிற்கு இபோச சார்பில் தோற்றி சாட்சியளித்து இபோசவின் சொத்துவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

33. கழுத்துறை பஸ் நிறுத்துமிடக் காணியில் இபோசவிற்குக் சொந்தமான காணித்துண்டு சொத்து மதிப்பீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

34. மொறட்டுவை கட்டுபெத்தயில் அமைந்துள்ள Sierra Construction நிறுவகத்திற்கு குத்தகைக்கு கொடுத்துள்ள காணிக்கு 2016/08/08 திகதி முதல் நிலுவையிலுள்ள வரியைப் பெறுமுகமாக இபோச பணிப்பாளர் சபைக்கு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 04 தவணைக்கட்டணங்கள் அறிவிடவேண்டியுள்ளது. மேலும் மதிப் பீட்டறிக்கை பெறுவதற்காக மீண்டும் ஞாபகமூட்டி கோரிக்கை விடப்பட்டுள்ளது. புதிய மதிப்பீட்டறிக்கை கோரி அதன் பிரகாரம் பணத்தையும் நிலுவையையும் மீண்டும் அறவிடுவதற்கும் 2022ஆம் ஆண்டிற்குப் புதிய குத்தகை உடன்படிக்கை செய்துகொள்வதற்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

35. நிவித்திகல கூட்டுறவு நிறுவகம்அமைந்துள்ள காணி இபோசவிற்கு சொந்தமானதென்பதுடன் அந்த நிறுவனத்துடன் செய்துகொண்ட குத்தகை உடன்படிக்கைப் பிரகாரம் 2015ஆம் ஆண்டு முதல் குத்தகை பணம் அறவிடப்படாததால், இபோச பணிப்பாளர் சபைக்கு விவரங்கள் சமர்ப்பித்து அதன் தீர்மானத்திற்கேற்ப தற்போது பழைய மதிப்பீட்டின் பிரகாரம் 8 ஆண்டு குத்தகைக் கூலி நிலுவையான 176,000/= ரூபா அறவிடப்பட்டுள்ளதுடன், புதிய மதிப்பீட்டறிக்கை பெறும் பொருட்டு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்த மதிப்பீட்டறிக்கைக்கேற்ப அதிகரிக்கும் தொகையை மீண்டும் நிவித்திகலை கூட்டுறவு சங்கம் செலுத்துவதற்கு உடன்பட்டுள்ளது.

36. இபோச அக்கரைப்பற்றுச் சாலைக் காணியை குத்தகை அடிப்படையில் அளிப்பதற்கு காணி சீர்திருத்த ஆணைக்குழு பொறுப்பேற்று பொருள்கோடல் பெற்றுள்ளது. இதற்காக 17 மில்லியன ரூபா செலுத்துவதாக காட்டப்பட்டுள்ளது. இதற்கேற்ப இக்காணியை விற்பனை அடிப்படையில் பெற்ற காணியென்பது உறுதியானதுடன் நட்டஈடு செலுத்தி முடிக்கப்பட்டது. உறுதி பெற எதிர்பார்க்கப்படுகிறது.

37. ஹோமகமை பழைய இபோச பஸ் நிலையக் காணி தொடர்பாக மேல்மாகாண வீதிப் போக்குவரத்து அதிகாரசபையினால் உரிமை வெளிப்படுத்தல் சமர்ப்பித்தபோது இதனுடன் தொடர்புடைய ஹோமகமை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இபோச சொத்துவம் உறுதிப்படுத்தப்பட்டு மேல்மாகாண வீதிப் பயணிப் போக்குவரத்து அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துவம் வெளிப்படுத்தல் செல்லுபடியற்றதெனக் நிரூபிக்கப்பட்டது. அங்ஙனமே இபோச சொத்துவத்துக்குரிய சகல காரணிகளும் ஹோமகமை பிரதேச செயலாளருக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

38. மாலபே பஸ் நிறுத்துமிட காணி 1996ஆம் ஆண்டின் அமைச்சரவைத் தீர்மானத்திற்கேற்ப மேல்மாகாண வீதிப் பயணப் போக்குவரத்து அதிகாரசபைக்கு உடைமையாக்கப்பட்டதென அந்த அதிகாரசபையால் கடுவெலை பிரதேச செயலாளருக்கு உரித்து சமர்ப்பித்த வேளையில் அதனோடு சம்பந்தப்பட்ட சகல எழுத்துருவ காரணிகளும் சமர்ப்பிக்கப்பட்டு காணியின் சொத்துவம் இபோசவுடையதென விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இபோச பொறுப்பிலுள்ள காணிப் பகிர்வுத்துண்டுகள் தற்காலிக அடிப்படையில் வெளி நிறுவனங்கட்கு குத்தகை அடிப்படையில் அளித்து இபோச பணம் அறவிடல்

இபோச பொறுப்பிலுள்ள காணிப் பகிர்வுத்துண்டுகளை தற்காலிக அடிப்படையில் வெளி நிறுவனங்கட்கு குத்தகை அடிப்படையில் அளிக்கும் போது அறிவிடப்படவேண்டிய பணம் உரிய பிரதேசத்திலுள்ள சாலைக்கு அளிக்கப்படுவது. 2022/01/31ஆந் திகதி இபோச தலைவரின் கடிதத்திற்கேற்ப நடைபெறுவதால் குத்தகை பணம் பெறுவது தொடர்பான நிலையான தகவல் சமர்ப்பிக்க முடியாதுள்ளது.

01. இபோச நிட்டம்புவை பஸ் நிறுத்துமிட காணிப் பகிர்வுத்துண்டு டில்ஷான் கொமினக்கேசன் நிறுவனத்தின் வாகன நிறுத்துமிடமாக அறிப்பதற்கு உரிய இபோச பணிப்பாளர் சபைத் தீர்மானப் பிரகாரம் குத்தகை செலுத்தும் அடிப்படையில் விடுவிக்கப்பட்டது.

02. இபோச பதுளை பஸ்ஸற காணி பகிர்வுத்துண்டு (QSJV) நிறுவகத்திற்கு 2020.09.24முதல் 2121.03.23 வரை ரூ 109,777,50 குத்தகையாக அறவிட்டு, அதன் பின்னர் இபோச பணிப்பாளர் சபைத் தீர்மானப்படி அரச மதிப்பீட்டறிக்கை கோரப்பட்டுள்ளதுடன், அந்த அரச மதிப்பீட்டறிக்கை தொகை 2921.03.24 முதல் 2022.06.31 வரை 125,000/= ரூபாவும், 2022 ஆம் ஆண்டுக்குரிய சகல குத்தகைத் தொகையும் () நிறுவகத்தினால் இபோச ஊவா பிரதேச அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்டதுடன், 2022.07.01 முதல் 2023.06.30 வரை 06 மாதங்களிற்கு 109,770,50 ரூபா கட்டணம் என்பதற்மைய புதிய குத்தகை உடன்படிக்கை தயாரிக்கவும் பணிப்பாளர் சபை அனுதி வழங்கியது.

03 இபோச கம்பஹா சாலைக் காணிப் பகிர்வுத் துண்டு மொபிடைல் நிறுவனத்திற்கும் டெலிகொம் நிறுவனத்திற்கும் தொலைபேசி தொலைத்தொடர்பு கோபுரம் நிறுவுவதற்கு உரிய இபோச பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கேற்ப மாதாந்த குத்தகை செலுத்தும் நடவடிக்கை இபோச கம்பஹா சாலை மூலம் இடம்பெறுகிறது.

04. இபோச கதிர்காம இளைப்பாற்றி மண்டபக் காணிப் பகிர்வுத் துண்டு மக்கள் வங்கியின் 'பெற்' இயந்திரம் பொருத்துவது தொடர்பாக அளிப்பதற்கு உரிய இபோச பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கேற்ப மாதாந்த குத்தகை செலுத்தும் அடிப்படையில் விடுவிக்கப்பட்டது. இதற்கேற்ப 2022 ஜனவரி மாதம் முதல் மாதாந்தம் 28,000/= ரூபா வீதம் சகல மாதங்களிலும் கதிர்காமச் சாலையில் செலுத்தப்பட்டது.

05. இபோச மத்திய பஸ் நிலைய அலுவலக் காணிப் பகிர்வுத் துண்டு (Sheshan Caterers) ஹேஷான் கேற்றஸ் நிறுவகத்திற்கு குத்தகைக்கு அளிப்பது தொடர்பாக இபோச பணிப்பாளர் சபைத் தீர;மானம் பிரகாரம் மாதாந்த குத்தகை அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப 2021.12.21 முதல் 2022.12.20 வரை 135,000/= ரூபா வீதம் 1,620,000 ரூபா குத்தகைக் கட்டணம் இபோச நிதிப் பிரிவிற்குச் செலுத்தப்பட்டது. மேலும் 2022.12.21 ஆந் திகதியிலிருந்து குறிப்பிட்ட குத்தகை ஒப்பந்தம் காலாவதியாவதால் 2022/11/16ஆந் திகதி நடைபெற்ற 10ஆம் பணிபபாளர் சபைக் கூட்டத்தில் 136ஆம் இலக்க சபைப் பத்திரம் தொடர்பில் மேலும் 02 ஆண்டுகட்கு (2022.12.21 முதல் 2024.12.20 வரை) 135,000/= ரூபாவிற்கு கூடுதலாக 25% வீத கட்டண உயர்வுடன் 168,750/= ரூபா விற்கு விடுவிக்கப்பட்டது.

பாதுகாப்பு பிரிவு

1. நாடு பூராவும் இபோசபைக்கு சொந்தமான சகல நிறுவனங்கட்கும் பாதுகாப்பு அளித்தல்

   இதற்காக இபோச நிரந்தரப் பிரிவு அலுவலர்களின் வெற்றிடங்கள் உள்ளமையால் தனியார் பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்கும் கம்பனிகள் மூலம் அவர்களது சேவைகளைக் கொள்வனவு செய்து கண்காணித்தல் (தற்போது நடைபெறுகிறது)

2. CCTV கமரா முறைமையைப் பொருத்துவதன் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்காக்கல்.

3. எல்லா இபோச வேலையிடங்களிற்கும் தீயணைப்பு உபகரணங்களை வழங்கல் / பேணல் / அது தொடர்பாக மேற்பார்வை செய்தல்

4. இபோச தலைமை அலுவலக பிரதான வாயிலுக்கும் அமைச்சர் வாயிலுக்கும் 02 கதவுகள் நவீனமயப்படுத்தப்பட்டு அக்கதவுகளை உள்ளடக்கி வில்வடிவிலான கூரை பொருத்துதல்

5. இபோச தலைமையலுவலக பாதுகாப்பு அலுவலகத்தை நவீனமயப்படுத்தல்

6. இபோச நிறுவகத்துள் உள்ள பாதுகாப்பு குடில்களை நவீனமயப்படுத்தல்

7. பாதுகாப்புப் பிரிவின் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சீருடை அளித்தல் (பெண்களுக்குத் துணி பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

செயற்பாடுகள்

1. தீவடங்கிலுமுள்ள இபோச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல் மற்றும் துர்நடத்தைகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் எழுத்துருவ முறைபாடுகளையும், பயணஞ்செய்யும் மக்களின் முறைப்பாடுகளையும் புலனாய்வு செய்தல்

2. இபோச சகல சாலைகளிலும் பஸ் நிலையங்களிலும் முன் அறிவித்தலின்றி திடீர்ப் பரிசோதனைகள் மேற்கொண்டு ஊழல், துர்நடத்தைகளை ஆகக் குறைந்தளவிற்குக் குறைத்தல்

3. இபோச தலைமையலுகத்தின் சகல ஊழியர்கட்கும் இலவச பயணச் செல்கைச் சீட்டு வழங்கல்

வருடம்	முடிவுற்ற புலனாய்வுகள் எண்ணிக்கை	அவசர பரிசோதனைகள் எண்ணிக்கை
2022	65	15

2022 ஆம் ஆண்டில் 09 விசாரணைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன

உள்ளக கணக்காய்வுப் பகுதி

2022ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வுப் பகுதியால் ஆற்றப்பட்ட பணிகள் தொடர்பான விவரம்

நிதிப் பிரிவு

1. கொள்வனவு செய்த பஸ்களின் குத்தகை தவணைக்கட்டணக் கொடுப்பனவை பரிசோதித்தல்
2. சகல களஞ்சியங்களிலும் ஆண்டு அளவை நடவடிக்கைகளை முறைப்படி நடாத்துதல்
3. பிரதான காசேடு, நாளாந்த காசேடு கொடுப்பனவு வவுச்சர், பெற்றுக்கொண்ட பணம், வருவாய் சேகரிப்பு ஆகியவற்றை கணக்காய்வு செய்தல்
4. பணம், எரிபொருள் நுகர்வு (பஸ்களுக்கான எரிபொருள் பற்றாக்குறை / மீதி, அலுவலக (Pool) வாகனங்கள், சம்பளம் கணக்காய்வு, ஊழியர்கட்கு அளித்த கடன்களும் அறவீடுகளும் பரிசோதனை

தொழிநுட்பப் பிரிவு

1. குத்தகை முறையின் கீழ் இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் பஸ்கள் கொள்வனவு செய்தல்
2. பஸ்கட்குத் தேவையான முன்பதனிட்ட டயர்கள், பற்றறிகள் ஆகியன கொள்வனவு செய்தல். நியமித்த காலத்திற்கு முன்னர் பழுதடையும் டயர்களுக்கு நிதி ஏற்பாடு பற்றி பரிசோதித்தல்
3. உள்ளூர் கொள்வனவுகளையும் மூலப் பொருட்கள் கொள்வனவையும் பரிசோதித்தல்
4. எஞ்ஜின் கூறுகள், கியர்ப்பெட்டிகள் ஆகியவற்றின் பழுதுபார்த்தல்கள்

நிருவாகப் பிரிவு

1. மனிதவள தகவல் முறைமையைச் செயற்படுத்தல்
2. ஊழியர் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுத் திட்டத்தைச் செயற்படுத்தல்

பயிற்சிப் பிரிவு

1. ஊழியர்களின் சகல பயிற்சி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
2. களுத்துறை சாரதிப் பயிற்சிப் பாடசாலையின் புதிய விடுதி நிர்மாணத்தைப் பரிசோதித்தல்

செயலகப் பிரிவு

1. சகல சொத்துக்களின் முகாமைத்துவம்
2. காணியின் உரிமையையும் சொத்துவத்தையும் உறுதிப்படுத்தல், காணிகளைக் கணக்குகளில் காட்டுதல்

நீதி பிரிவு

இபோசவின் சகல சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்

சிவில் பிரிவு

இபோசவின் கட்டடங்களைப் பழுதுபார்த்தலும், புதிய நிருமாணங்களும், மதிப்பீடு தயாரித்தல் மூலப்பொருள்கள் கொள்வனவு

அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு

பல்வேறு அறிக்கைகள் தயாரிப்பு, சமர்ப்பித்தல் ஆகியவற்றை பரிசோதித்தல்

பாதுகாப்புப் பிரிவு

இபோச பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பரிசோதித்தல்

ஏனையவை

1. 2018ஆம் ஆண்டின் செயற்றிட்டம் செயற்பாடு
2. பணிக்கொடை கணக்காய்வு
3. ஒழுக்காறு, விபத்து, சேதம்
4. தலைவரினால் சமர்ப்பிக்கப்படும் விசேட புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

5. கணக்காய்வு கலந்துரையாடல்களை நடாத்துதல்
6. கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்களை நடாத்துதல்
7. சுற்றுலா விடுமுறைவிடுதி, ஷாலிக்கா மண்டபம், விளையாட்டரங்கு நடவடிக்கைகள்
8. அரச ணக்காய்வு ஐயவினாக்கட்கான மறுமொழிகளை மேற்பார்வை செய்தல்

மனிதவள முகாமைத்துவப் பகுதி

30000/- ரூபாபடியில் முற்றும் ஒப்பந்த அடிப்படையில் 06 மாதகாலத்திற்கு செய்யப்பட்டசாரதி / நடாத்துநர் நியமனங்கள்

நியமனத் தன்மை	**எண்ணிக்கை 2022**
ஒப்பந்த சாரதிகள்	11
ஒப்பந்த நடாத்துநர்கள்	-
மொத்தம்	11

நிறைவேற்று நியமனங்கள் பற்றிய விவரம்

நியமனத்தன்மை	**எண்ணிக்கை 2022**
நிரந்தர நியமனங்கள்	-
தழுவல் நியமனங்கள்/ஒப்படை	42
பதவி உயர்வுகள்	-
தழுவல் நியமன நிரந்தரப்படுத்தல்கள்	-
இடமாற்றங்கள்	23
ஒப்பந்த நியமனங்கள்	-
புதிய ஆட்சேர்ப்புகள்	-
மொத்தம்	65

மீள வேலையளித்தல்

நியமனத்தின் தன்மை	**எண்ணிக்கை 2022**
மீள வேலை	01
மொத்தம்	01

செய்முறைப் பயிற்சியளித்தல்

நியமனத்தின் தன்மை	**எண்ணிக்கை 2022**
கணனிப் பிரிவு பயிற்சி	17
கணக்குப் பிரிவு பயிற்சி	02
தொழிநுட்ப பிரிவு பயிற்சி	153
மொத்தம்	172

நிறைவேற்றுத் தரம் அல்லாத இடமாற்றங்கள்

நியமனத்தின் தன்மை	**எண்ணிக்கை-2022**
இடமாற்றம்	425
மொத்தம்	425

ஒழுக்காற்றுப் பிரிவு

ஒழுக்காற்று கோவை விவரம்	**எண்ணிக்கை-2022**
நிறைவு செய்யப்பட்ட ஒழுக்காற்று கோவைகள்	1850
நிறைவு செய்யப்பட்ட மேன்முறையீட்டுக் கோவைகள்	238
மொத்தம்	2088

திடீர்ப் பரிசோதனைக் குழுப் பிரிவு

2022 ஆம் ஆண்டில் திடீர்ப் பரிசோதனைகளின் முன்னேற்ற அறிக்கை (தலைமை அலுவலகம்)

தொடர் இல.	மாதம்	குழுக்கள் எண்ணிக்கை	செவ்வை பார்த்த எண்ணிக்கை	செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை	தவறான நடத்தை செயல்கள்		பயணிகள் அபராதத்தின் எண்ணிக்கை	மொத்தம்	ஒழுக்காற்று விசாரணைகளின் மொத்த எண்ணிக்கை	ஒழுக்காற்று விசாரணைகள் நிறைவு
					iv	v				
01	ஜனவரி	3	62	805	30	0	0	0	42	26
02	பெப்ரவரி	3	43	610	21	0	0	0	46	24
03	மார்ச்	3	49	659	25	0	0	0	55	40
04	ஏப்ரல்	3	47	803	7	0	0	0	25	17
05	மே	3	27	372	7	0	0	0	36	12
06	யூன்	3	35	462	22	0	0	0	32	28
07	யூலை	3	34	452	26	0	0	0	31	22
08	ஆகஸ்ட்	3	60	692	29	0	0	0	32	19
09	செப்தம்பர்	3	54	789	40	0	0	0	49	26
10	ஒக்டோபர்	3	36	379	25	0	0	0	32	12
11	நவம்பர்	3	56	412	27	0	1	588.00	57	33
12	டிசெம்பர்	3	55	644	23	0	0	0	42	22
	மொத்தம்		**357**	**4855**	**167**	**0**	**1**	**588.00**	**299**	**188**

2022 ஜனவரி முதல் டிசம்பர் வரை தீவடங்கிலும் மத்திய திடீர்ப் பரிசோதனை குழுவின் அறிக்கை

மாதம்	குழுக்கள் எண்ணிக்கை	செவ்வை பார்த்தல் எண்ணிக்கை	செவ்வை பார்த்த பஸ்கள் எண்ணிக்கை	பார தூரமான குற்றங்கள் (IV)	சிறு குற்றங்கள் (V)	தண்டம் விதித்த பயணிகள் எண்ணிக்கை	தண்டம் ரூபா
ஜனவரி	28	391	4,670	69	87	64	33,045.00
பெப்ரவரி	25	374	4674	46	42	67	29,868.00
மார்ச்	25	355	4,290	57	73	112	51,879.00
ஏப்ரல்	43	517	5,651	36	33	52	25,803.00
மே	26	416	4,645	23	33	43	20,108.00
யூன்	27	509	6,101	59	66	105	57,276.00
யூலை	27	364	4,817	52	37	49	33,280.00
ஆகஸ்ட்	28	569	7,104	71	70	106	61,452.00
செப்தம்பர்	40	568	6,976	82	90	131	80,110.00
ஒக்டோபர்	34	527	6,180	76	50	93	46,871.00
நவம்பர்	32	608	7,429	90	68	116	58,148.00
டிசெம்பர்	35	564	6,592	71	61	108	64,908.00
மொத்தம்	**370**	**5762**	**69129**	**732**	**710**	**1046**	**562,748.00**

அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் செயற்றிட்டம் - 2022ஆம் ஆண்டு

திட்டமிடல் பிரிவின் செயற்திட்டம்				
உத்தேச நடவடிக்கைகள்	பௌதீக இலக்கு			
	காலாண்டு			
	1	2	3	4
2022ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தியும் மற்றும் செயல்திட்டமும் 2023 - 2025ஆம் ஆண்டுகட்கான கூட்டிணைந்ததிட்டம் தயாரித்தலும்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
செயற்றிட்டத்திற்கேற்ப ஜனவரி முதல் டிசம்பர் வரை செயல் முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
சபையுடன் தொடர்புடைய சகல புள்ளிவிவர தகவல்களைச் சேகரித்தலும் நாளது வரையாக்கலும்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
தகவல் அலுவலர் என்ற ரீதியில் கோரப்படும் தகவல்களை அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அளிப்பதற்கு செயற்படல்	ஆண்டு பூராவும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டது			
மாதாந்தம் இலாப நட்டக் கணக்கையும் காசோட்ட அறிக்கையையும் தயாரித்தல் (மாகாண வேலைக்களங்கள், சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள், சுற்றுலா வங்களாக்கள்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
மாகாண வேலைக்களங்கள், சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள், சுற்றுலா வங்களாக்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கை தயாரித்தல்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
கணக்காய்வு மற்றும் முகாமைத்துக்குழு அறிக்கை தயாரித்தலும் சமர்ப்பித்தலும்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
போக்குவரத்து அமைச்சும் மற்றும் இதர அரச நிறுவகங்களும் கோரும் விசேட அறிக்கைகளைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			
கணக்காய்வு மற்றும் முகாமைத்துக்குழு கூட்ட நிகழ்ச்சி நிரல் தயாரித்தலும் சமர்ப்பித்தலும்	தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது			

கேள்விப்பத்திர சபைப் பிரிவு

2022-01-01**ஆந் திகதி முதல் கேள்விப்பத்திர சபைப் பிரிவினால் கூறுவிலை கோரப்பட்ட பணிகளின் விவரம்**

தொடர் இல.	திகதி	நிறைவேற்றிய பணிகள்	கேள்விப் பத்திரங்கள் உறுதிப் படுத்தப்பட்ட திகதி
01	2022-01-06	2022 / 2023 ஆம் ஆண்டுகட்கு வாகன காப்புறுதி	2022-01-07
02	2022-01-06	இரத்மலானை எரிபொருள் நிரப்பும் நிலையத்தையும் இறப்பர் பகுதியையும் காப்பீடு செய்தல்	2022-01-07
03	2022-01-06	2022 ஆம் ஆண்டுக்கு வழங்குநர்களைப் பதிவுசெய்தல் (இணைய உபயோக மூலம்) நிகழ்நிலை	2022-01-06
04	2022-01-11	ரியூப் அற்ற 295 / 80R 22.5 புதிய றேடியல் டயர் 162 வழங்கலும் வினியோகமும்	2022-01-24
05	2022-01-11	இ.போ.சபைக்குத் தேவையான வில்லுத்தகடுகளைக் கொள்வனவு செய்தல்	2022-01-05
06	2022-01-24	2021 ஆம் ஆண்டுக்கான றெக்சின் துணியைக் கொள்வனவு செய்தல்	2022-02-02
07	2022-01-25	இ.போ.சபைக்கு மடிப்புகள் வழங்கலும் விநியோகமும்	2022-02-01
08	2022-02-08	ஷாலிக விளையாட்டரங்கில் மீந்துள்ள பழுது பார்த்தல் பணிகள் தொடர்பாக பதனிடலும்	2022-02-09
09	2022-02-08	இ.போ.சபைக்குத் தேவையான டயர் மீளநிரப்பலும் மீளப்பதனிடலும்	2022-02-10
10	2022-01-12	**இ.போ.சபைக்கு மற்றுறுப்புகளுக்கான கூறுவிலைகோரல்** (Brake Liners)(W-21)	2022-02-21
11	2022-01-12	**இ.போ.சபைக்கு மற்றுறுப்புகளை கொள்வனவு செய்தல்** (Battery, Spares & Oil Seals (W-22,W-10,W-36) Brake Spares	2022-02-22
12	2022-03-07	இபோச அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்தல்	2022-03-03
13	2022-03-07	இபோச அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு உற்பத்தி மூலப் பொருட்கள் பெற்றுக்கொள்ளல்	2022-03-21
14	2022-03-07	இபோச தலைமையகத்திற்கு நாள் முத்திரை அலுவலக இலச்சினை தயாரித்தல்	2022-02-15
15	2022-03-07	2022ஆம் ஆண்டிற்கு பருவகாலச் சீட்டுக்கள் கொள்வனவு செய்தல்	2021-11-19
16	2022-03-07	பயணிகளை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தை செயற் படுத்துவதற்காக விளம்பரத்துணுக்குகள் அச்சிடல்	2022-02-28
17	2022-03-08	World Bank Funded Investment Projects – Sanitary Facilities	2022-03-22
18	2022-03-03	ஷாலிகா விளையாட்டரங்கில் தொழில் கூலி ஒப்பந்த அடிப்படையில் அளிக்கப்படவுள்ள மலசலகூட பழுதுபாத்தல், எல்லைச்சுவர் கட்டிடங்களின் கூரைகளும் டெனிஸ் மைதானத்திற்கு அருகாமையில் வர்ணம் பூசல்	2022-03-09

19	2022-02-28	ஷாலிகா மைதானத்தை முதற்தர மைதானமாக மேம்படுத்தல்	2022-03-22
20	2022-03-15	இபோச பஸ்களுக்குத் தேவையான டயர்களை மீளநிரப்பலும் முன்பதனிடலும் (அமைச்சில் திறக்கப்படும்)	2022-04-06
21	2022-03-15	Quotation for the supply & Delivery of Stationary for SLTB	2022-03-21
22	2022-03-21	மாதாந்த தகடுத் தேவையைப் பெறல்	2022-03-29
23	2022-03-25	அலுமினியத்தால் அலுவலக ஒதுக்கீடு உடகமுல்ல சாலை	2022-03-28
24	2022-03-25	ஷாலிக விழா மண்டபத்திலும் ஷாலிக விளையாட்டரங்கிலும் மீதமுள்ள பழுதுபார்த்தல் பணிகைள நிறைவேற்றல்	2022-03-28
25	2022-03-28	ஷாலிகா விளையாட்டரங்கில் உடைந்து வீழ்ந்துள்ள எல்லைச்சுவருக்கு மீதமுள்ள பழுதுபார்த்தல் பணிகள்	2022-03-29
26	2022-04-01	World Bank Funded Sanitary Facilities Projects –	2022-04-04
	2022-04-25	இபோசவிற்கான எழுதுகருவி வகைகளை வழங்கலும் வினியோகித்தலும்	2022-04-25
27	2022-05-06	மனிதவள முகாமைத்துவப் பகுதிக்கும் போக்குவரத்துப் பகுதிக்கும் மேசை கதிரை பெறல்	2022-05-06
28	2022-04-28	Supply of Identity card Printing Raw Materials for SLTB	2022-05-12
29	2022-05-24	World Bank Funded Sanitary Facilities Projects –	2022-06-09
30	2022-05-20	இபோச பஸ்கட்கு தேவையான சீட்டியந்திர சுருள்கள் 100,000 கொள்வனவு செய்தல்	2022-05-28
31	2022-05-20	இபோசவிற்கு தேவையான மாற்றுறுப்புகள் கொள்வனவு செய்தல் (W-23)	2022-04-12
32	2022-05-30	295x80 R 22.5 புதிய டயர்கள் 100 கொள்வனவு செய்தல்	2022-06-01
33	2022-05-30	இபோச பஸ்கட்கு தேவையான ரியூப்புகளை கொள்வனவு செய்தல்	2022-06-01
34	2022-05-30	இபோசக்குத் தேவையான மடிப்புகளை கொள்வனவு செய்தல்	2022-06-01
35	2022-06-06	Quotation for the supply & Delivery of toners for SLTB Head office & Regional office	2022-06-15
36	2022-06-07	சீட்டு இயந்திரங்களுக்கு தேவையான சீட்டு சுருள்களை கொள்வனவு செய்தல்	2022-06-08
37	2022-06-09	இபோசவிற்குத் தேவையான தீயணைக்கும் உபகரணங்களைப் பெறல்	2022-06-16
38	2022-06-09	Park and Ride திட்டத்தின் கீழ் 12 பஸ்களை வாடகை அடிப்படையில் கொள்வனவு செய்தல்	2022-06-13
39	2022-06-09	இபோசவிற்கான லேலண்ட் உருளைத்தலைகளை கொள்வனவு செய்தல் (W-05)	2022-06-22
40	2022-06-10	உலக வங்கி உதவியின் கீழ் இபோச சாலைக்கு (Shopping) முறை மூலம் கொடவெல, எம்பிலிப்பிட்டி சாலைகளின் மலசலகூட முறையை	2022-06-13

		நிருமாணிப்பதற்கான கூறுவில கோரல்	
41	2022-06-10	இபோச நிறுவகத்திற்குத் தேவையான தனியார் பாதுகாப்பு சேவையை நடத்திச் செல்லல்	2022-06-23
42	2022-06-10	புதிய 800 டயர்கள் கொள்வனவு செய்தல் 1295x80 22.5**295** x 80 R 22.5	2022-06-17
43	2022-06-21	முல்லைத்தீவுச் சாலையில் எரிபொருள் தாங்கி நிறுவுவதற்கான கூறுவிலைகள் கோரல்	2022-06-23
44	2022-06-27	இபோச பஸ்கட்குத் தேவையான சீட்டுச் சுருள்களைக் கொள்வனவு செய்தல்	2022-06-28
45	2022-07-06	இபோச பஸகட்கு தேவையான சீட்டுச்சுருள்களை கொள்வனவு செய்தல்	2022-07-08
46	2022-07-20	அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு மாதாந்த மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்தல்	2022-07-21
47	2022-07-20	இபோச பஸ்கட்கு தேவையான லேலண்ட் மாதிரி உருளைத் தொகுதி கொள்வனவு செய்தல்	2022-07-12
48	2022-07-20	இபோச பஸ்கட்குத் தேவையான டாட்டா மாதிரி உருளைத் தொகுதி கொள்வனவு செய்தல்	2022-07-11
49	2022-07-20	இபோச பஸ்கட்கு மின்சார மாற்றுறுப்புகள் கொள்வனவு செய்தல்	**2022-07-29**
50	2022-08-08	இபோச பஸ்கட்குத் தேவையான சீட்டுச் சுருள்களைக் கொள்வனவு செய்தல் (02 மாதத் தேவை)	2022-08-10
51	2022-08-08	இபோச பஸ்கட்குத் தேவையான சீட்டுச் சுருள்களைக் கொள்வனவு செய்தல் (06 மாதத் தேவை)	2022-08-16
52	2022-08-18	அம்பாறை டயர் தொழிற்சாலைக்கான மாதாந்த மூலப்பொருள்களை கொள்வனவு செய்தல்	2022-08-22
53	2022-08-16	இபோச பஸ்கட்கு தேவையான மடிப்புகளை கொள்வனவு செய்தல்	**2022-08-19**
54	2022-09-01	இபோ பஸ்கட்குத் தேவையான **295/80**R 22.5 size **200** டயர்களை	2022-09-05
55	2022-09-08	அம்பாறை டயர்த் தொழிற்சாலைக்கு மாதாந்த மூலப்பொருட்கள் கொள்வனவு செய்தல்	2022-09-13
56	2022-09-15	Monthly Purchase of raw materials for Ampara Tyre Factory	**2022-09-26**
57	**2022-09-20**	உலக வங்கி உதவியுடன் (SHOPPING) முறை மூலம் பலாங்கொடை, மொனராகல, மஹியங்கனை திருகோணமலை சாலையில் மலசலகூட முறையை நிருமாணிப்பதற்கான கூறுவில கோரல்	2022-09-23
58	2022-09-26	அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு 10 நாட் தேவைகளைக்	2022-09-28

		கொள்வனவு செய்தல்	
59	2022-10-04	தலைமை அலுவலக சிற்றுண்டிச்சாலையை நடாத்துதல்	2022-10-18
60	2022-10-17	இபோசவிற்கான அலுமினியம், சிங் பூச்சிட்ட தகடுகள் கொள்வனவு செய்தல் - 2023ஆம் ஆண்டு (மானி 12, மானி 16, மானி 20) கொள்வனவு செய்தல்	2022-11-08
61	2022-10-17	2022ஆம் ஆண்டின் மீதி 04 மாதங்கட்கு தேவையான தகடுகளை கொள்வனவு செய்தல்	2022-10-31
62	2022-10-17	2023ஆம் ஆண்டிற்கு மானி 18 அலுமினியத் தகட்டுத் தேவைகளைக் கொள்வனவு செய்தல்	2022-11-08
63	2022-10-18	இபோச பஸ்கட்குத் தேவையான R 20 1000 R 22.5 **12** R 22 அளவான **1000** டயர்களை கொள்வனவு செய்தல்	2022-11-09
64	2022-10-18	இபோச பஸ்கட்கு வில்லுத்தகடுகளை கொள்வனவு செய்தல்	2022-11-09
65	2022-10-19	2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல் (பஸ்கள், பொது, இலகு வாகனங்கள்) நிகழ்நிலை	2022-11-20
66	2022-11-02	இபோச அம்பாறை தயர் தொழிற்சாலை பவின் தூள் விற்தற்கான கூறுவில் கோரல்	2022-11-09
67	2022-11-09	2023ஆம் ஆண்டுக்கான டோனர் கூறுவிலை கோரல்	2022-11-28
68	2022-11-15	2023ஆம் ஆண்டுக்கான எழுதுகருவிகைகட்கு கூறுவில கோரல்	2022-11-28
69	2022-11-22	2023ஆம் ஆண்டுக்கான பருவகாலச்சீட்டுகளை அச்சிடல்	2022-12-06
70	2022-11-30	அம்பாறை டயர் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்தல்	2022-10-14
71	2022-11-30	அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்தல்	2022-11-16
72	2022-12-01	அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு 3 மாதங்கட்குத் தேவையான மூலப் பொருட்களை கொள்வனவு செய்தல்	2022-12-15
73	2022-12-06	அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு 10 நாட்கட்கு தேவையான மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல்	2022-12-08
74	2022-12-06	அதி உல்லாச சுற்றுலாப் பயணப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள Yutong பஸ்கட்குத் தேவையான 40 டயர்களை கொள்வனவு செய்தல்	2022-12-14
75	2022-12-06	வெளிக்கணக்காய்வு நிறுவனங்களின் உதவி பெறல்	2022-12-08
76	2022-12-16	பஸ் உடற்கோப்பு உற்பத்திக்குத் தேவையான கண்ணாடியை	2022-12-21

		கொள்வனவு செய்தல்	
77	2022-12-27	இபோச பஸ்கட்குத் தேவையான 14106 ரியூப்புகளைக் கொள்வனவு செய்தல் (2022ஆம் ஆண்டுக்கான)	2023-01-09
78	2022-12-27	மாதாந்த வாடகை அடிப்படையில் இபோசவிற்கு வாகனங்கள் பெறல்	2023-01-13
79	2022-12-30	அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு தேவையான மூலப்பொருள் தேவையெனக் கொள்வனவு செய்தல்	2023-01-03
80	2022-12-30	தலைமையலுவலக சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்லல்	2023-01-05

வழங்கல் பிரிவு

தொடர் இல	விடயம்	செயற் திட்டத்தின் பெயர்	2022ஆம் ஆண்டிற்கு ஒதுக்கிய நிதி (ரூ.மி)	நிதி முன்னேற்றம் (ரூ.மி)	எய்திய இலக்கு	பௌதீக முன்னேற்றம்
01	சகல கொள் வனவு நடவடிக் கைகளை யும் மேற் கொள்ளல்	செயலாற்றல் நடவடிக்கை களுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல்	176.50	200.91	பஸ் அணியைப் பேணுவதற்கு வேண்டிய புதிய பற்றறிகளைக் கொள்வனவு செய்தல்	2022.01.01 - 2022.12.31 திகதி வரையான தேவைகளுக்கு 4415 புதிய பற்றறிகளைக் கொள்வனவு செய்து பிராந்தியங்கட்கும் சாலைகட்கும் தலைமையலுவலகம் பணம் செலுத்தி பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டன மேலும் தேவைக்கேற்ப பிராந்தியங்கட்கும் சாலைகட்கும் பற்றறி பெற்றுக்கொள்வதற்கு அறிவுறுத்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.
(எ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 (LKAS 07)இன் பிரகாரம் காசு பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது நிதி செயற்பாடுகளின் கீழ் அறிக்கையிடப்பட வேண்டிய ஊழியர் பங்கு வளங்களுக்கு உரியதாக செலுத்தப்பட்டிருந்த ரூபாய்.77,033.188 முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது .

(ஏ) 2021 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கணினிகளுக்கு உரிய 2021 ஆம் ஆண்டில் ரூபாய்.1,077,778 கூடுதலாக தேய்விடப்பட்டிருந்த போதிலும் அவ்வழுவானது 2022 ஆம் ஆண்டிற்கான நிதி கூற்றுகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2021 ஆம் ஆண்டில் பயணச்சீட்டு இயந்திரங்கள் ரூபாய்.5,393,206 இனால் அதிகரித்து தேய்விடப்பட்டிருந்ததுடன் அந்த தவறினை திருத்துவதற்காக 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளில் அவற்றுள் ரூபாய்.52,850 மாத்திரம் சீராக்கப்பட்டு இருந்ததுடன் எஞ்சிய பெறுமதியான ரூபாய்.5,340,356 இற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் திரண்ட நட்டம் அப்பெறுமதியினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்றின் நடைமுறை பணிகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த அளவான ரூபாய்.410,710 தொகையானது காசு பாய்ச்சல் கூற்றில் செயற்படு மூலதற்கான சீராக்கமாக ரூபாய்.9,365,056 காண்பிக்கப்பட்டிருந்தது. நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த நடைமுறை பணிகள் செயற்படு மூலதன மாற்றத்திற்கு சீராக்கப்பட்டமையால் செயற்படு மூலதனத்தின் மீதியானது மேற்படி பெறுமதியினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே ஆண்டின் மூலதன பணிகளுக்காக செலவிடப்பட்ட ரூபாய்.410,710 ஆன தொகை முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிதிநிலைமை கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபாய்.2,311,836,019 தொகையான சேமிப்பு கணக்கின் மீதி கட்டுபத்த, மஹரகம, மட்டக்குளிய மற்றும் காலி ஆகிய டிப்போக்களின் சேமிப்பு கணக்குகளின் மீதியுடன் ஒப்பீடு செய்யப்பட்டபோது திரண்ட மீதியாக ரூபாய்.1,236,332 ஆன தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதி முறையே ரூபாய்.18,894,925,500 மற்றும் ரூபாய்.2,292,972.501 எனுமாறு ரூபாய்.21,187,898,001 ஆக காணப்பட்டது. எனினும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறிப்பில் கட்டிடங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மீள் மதிப்பீட்டு பெறுமதியான ரூபாய்.2,300,199,459 தொகையானது மீளாய்வாண்டின் சேர்ப்பனவாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டினுள் கட்டிடங்களின் புதிய சேர்க்கப்பட்ட பெறுமதியான ரூபாய்.7,226,958 பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறிப்பில் கட்டிடங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(க) காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீள் மதிப்பீட்டு இலாபத்தினை கணிப்பீடு செய்யும் போது 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியான திரண்ட பெறுமான தேய்வு பெறுமதிக்கு நடபாண்டின் கட்டிடங்கள் மீதிக்கு உரிய பெறுமான தேய்வு பெறுமதியான ரூபாய்.9,705,106 ஆன பெறுமதி சேர்க்கப்பட்டு மீள் மதிப்பீட்டு இலாபம் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2022 டிசம்பர் 31 திகதியில் உள்ளபடியாக கணக்கிடப்பட்ட மீள் மதிப்பீட்டு இலாபம் ரூபாய்.20,976,927,250 ஆக காணப்பட வேண்டிய போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக உரித்துக்களிளான மாற்றங்கள் கூற்றில் ஒதுக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மீள் மதிப்பீட்டு இலாபம் ரூபாய்.20,985,508,217 ஆகும். அதற்கமைய மீள் மதிப்பீட்டு இலாபம் ரூபாய்.8,580,967 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) இலங்கை போக்குவரத்து சபையின் வேருகர மத்திய வேலை தளத்திற்கு உரித்தாக காணப்பட்ட இலங்கை இராணுவத்தின் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் போதனா மருத்துவமனை மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அமைந்துள்ள காணிகளின் பெறுமதி ரூபாய்.6.226 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதிக்கு பாதுகாப்பு அமைச்சினால் ரூபாய்.5.054 மில்லியன் செலுத்துவதற்கு இணங்கி இருந்தது. அத்தொகையில் ரூபாய்.4.954 மில்லியன் 2021 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் பகுதிகளாக பொதுத்திறைசேரியினால் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. தெற்கமைய இச் சொத்துக்களின் மதிப்பீட்டு பெறுமதியான ரூபாய்.6.226 மற்றும் சொத்துக்களை கையளித்தமையினால் ஏற்பட்ட நட்டமான ரூபாய்.1.72 மில்லியன் பெறுமதி கணக்குகளில் இருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கி) இரத்மலான எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நாளாந்த விற்பனை அறிக்கைகளுக்கு அமைய மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியான டீசல் விற்பனை வருமானம் ரூபாய்.1,554,296 இனால் அதிகரித்தும் பெட்ரோல் விற்பனை வருமானம் ரூபாய்.12.338,750 இனால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் எரிபொருள் விற்பனையினால் கிடைத்த மொத்த தேறிய வருமானம் ரூபாய்.10,784,454 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) இரத்மலான எரிபொருள் நிரப்பு நிலையத்தின் மாதாந்தம் தயாரிக்கப்படும் நாளாந்த விற்பனை விபரத்திற்கமைய மாதத்தின் இறுதியில் எஞ்சியுள்ள எரிபொருள் இருப்பு உள்ளபடியான எரிபொருள் இருப்புடன் ஒப்பிடப்பட்ட போது ரூபாய்.4,876,320 பெறுமதியான 15,421.96 லிட்டர் டீசல் மற்றும் ரூபாய்.2,647,897 பெறுமதியான 8,349.46 லிட்டர் பெட்ரோலின் பற்றாக்குறை காரணமாக ரூபாய்.7,524,217 கூட்டுத்தொகையான வருடாந்த இறுதி இருப்பு குறைத்து காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இலாபமும் அந்த அறவினால் குறைத்து வெளிப்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(கு) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபாய்.11,384,538,382 பெறுமதியான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வங்கி மீதிகளில் உள்ளடங்கியுள்ள ரூபாய்.1,290,782,782 பெறுமதியுடைய செயல்படுத்தப்படாத கணக்கு மீதிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் விரிவான பட்டோலைகளும் ரூபாய்.4,156,211,492 பெறுமதியுடைய பங்கு மூலதனத்திற்காக பங்கு சான்றிதழ்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களும், ரூபாய்.156,195,337 பெறுமதியான நிலையான வாய்ப்புக்களுக்கான சொத்துவகை மற்றும் விரிவான பட்டோலைகளும், ரூபாய்.753,363,548 பெறுமதியுடைய நிலையான வாய்ப்புக்கள் மற்றும் முதலீடுகளில் நிலையான வைப்புச் சான்றிதழ் பத்திரங்களும், ரூபாய்.4,571,242,599 பெறுமதியுடைய வியாபார கடன் கொடுத்தோர் தொடர்பான விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களும் ரூபாய்.89,191,198 பெறுமதியுடைய வியாபார கடன்பட்டோர் மற்றும் வழியில் உள்ள பணத்திற்கான மீதி உறுதிப்படுத்தல்களும் விரிவான பட்டோலைகளும், ரூபாய்.267,951,474 பெறுமதியுடைய முற்கொடுப்பனவு செலவினங்களுக்காக காலப்பகுப்பாய்வும் சப்ரகமுவ மற்றும் கிழக்கு பிரதேசங்களுக்கு உரிய 23 நடைமுறை கணக்குகளுக்குரிய ரூபாய்.7,551,643 தொகையான வரவு மீதிகள் மற்றும் ரூபாய்.92,048,309 தொகையான செலவு மீதிகளுக்கான வங்கி இணக்கங்கள், வங்கி கூற்றுகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தும் கடிதங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான வியாபார கடன்கொடுத்தோர் மீதியினுள் மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மீதியினுள் 02 வருட காலத்தினை விஞ்சிய முறையே ரூபாய்.1,495,204,034 மற்றும் ரூபாய்.90,864,377 எனுமாறு ரூபாய்.1,586,068,411 கூட்டுத் தொகையான தீர்க்கப்படாத கடன் மீதிகள் காணப்பட்டது.

(கெ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ரூபாய்.3,522,347,457 பெறுமதியான வியாபார கடன்கொடுத்தோர் மீதியினுள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காணப்பட்ட ரூபாய்.21,698,022 தொகையான வரவு மீதி ஒன்று உள்ளடக்கப்பட்டிருந்த காரணத்தால் கணக்கு வைக்கப்பட்டிருந்த கடன் கொடுத்தோர் மீதி அந்த அறவினால் குறைத்துக் காண்பிக்கபட்டிருந்தது.

(கே) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியான உள்நாட்டில் கொள்வனவுகளுக்கான முற்பண கணக்கில் ரூபாய்.1,378,085,248 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் அதற்கான பட்டோலைகளை வழங்காத காரணத்தால் அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன் அவற்றுள் ரூபாய்.1,373,773,207 தொகையான மீதிகள் 02 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டு வரப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது.

(கை) காசு பாய்ச்சல் கூற்றில் கடந்த வருடங்களின் சீராக்கமாக ரூபாய்.277,773,205 காண்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்கு குறிப்புகளிலும் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியிலும் இத் தொகையானது ரூபாய்.335,325,734 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய

காசு பாய்ச்சல் கூற்றில் கடந்த வருடங்களின் சீராக்கமாக ரூபாய்.57,592,529 குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(கொ) மீளாய்வாண்டின் நிதிநிலைமை கூற்றில் ஏனைய நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் ரூபாய்.1,860,824,837 தொகையான தீர்ப்பனவு செய்யப்படாத இலங்கை போக்குவரத்து சேவையின் ஊழியர் நலன்புரி நிதியத்தின் பங்களிப்பாக செலுத்த வேண்டிய கணக்கு மீதி காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அம் மீதி 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன் கொண்டுவரப்படுகின்ற மீதி என்பது அவதானிக்கப்பட்டது. எவ்வாறான போதிலும் அவ்வாறான ஊழியர் நலன்புரி நிதிய பணம் போக்குவரத்து சபையினால் ஊழியர் நலன்புரி நிலயத்திற்கு உள்ளபடியாக செலுத்த வேண்டிய மீதி என்பதை உறுதிப்படுத்துவதற்கு எந்த சான்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(கோ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் ஊழியர் நலன்புரி நிலையத்திற்கு உரிய பங்களிப்பாக செலுத்தப்படாத மீதி ரூபாய்.256,503,445 காணப்பட்டதுடன் அம் மீதியினுள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபாய்.37,041,436 தொகையும் கமா 05 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபாய்.191,712,461 மீதியும் 02 முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபாய்.7,850,445 மீதியும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறான போதிலும் சபையினால் பேணிச் செல்லப்படும் ஊழியர் நலன்புரி நிதியத்திற்கான பங்களிப்பு பணம் செலுத்தப்பட்ட தரவுகளுக்கு அமைய தொடர்ந்தும் இனங்காணப்படாத செலவு மீதியின் கொடுப்பனவுகளினுள் உள்ள உண்மையான செலவு மீதியா என்பது தொடர்பில் கணக்காயில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(கௌ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்றில் வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த செயற்படுத்தப்படாத 13 கணக்குகளுக்கு உரிய ரூபாய்.1,084,753,124 பெறுமதியுடைய மீதி ஒன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ச) இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 36 டிப்போக்களில் காணப்பட்ட ரூபாய்.23,348,867 தொகையான வரவுமீதி மற்றும் ரூபாய்.165,336,690 தொகையான வங்கி மேலதிக பற்று மீதியுடனான 40 நடைமுறை கணக்குகளுக்காக வங்கிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அந்த நடைமுறை கணக்குகளுக்கு உரியதாக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்க கூற்றுக்களின் சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது.

(சா) கின்தொட்ட பெட்டிகலவத்த பிரதேசத்தின் வேலைத்தளத்தில் மக்கள் வங்கியின் பேணிச் செல்லப்படும் நடைமுறை கணக்கிற்குரிய ரூபாய்.10,889,598 ஆன மீதி வைப்புச் செய்யப்பட்ட போதிலும் அகற்றப்படாத மீதி ஒன்று மற்றும் ரூபாய்.11,419,020 தொகையான வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத மீதி ஒன்றும் காணப்பட்டதுடன் அம்மீதிகள் 2021 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டு வரப்படுவதுடன்

அந்த பெறுமதிகளை இனங்கண்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(சி) இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இரத்மலானை மற்றும் ஒறுகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இரண்டினதும் நடைமுறை கணக்குகளின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபாய்.5,737,177 மற்றும் ரூபாய்.42,547,041 தொகையான வரவு மீதிகள் காணப்பட்டு போதிலும் அக்கணக்குகளுக்கு உரிய 2022 ஆம் ஆண்டிற்கான எந்த தகவலும் கணக்காய்க்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே 2018 ஆம் ஆண்டு முதல் எந்த செயற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத ஒறுகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தினால் இலங்கை வங்கியில் பேணிச் செல்லப்படும் நடைமுறை கணக்கில் ரூபாய்.42 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை எந்த வட்டி வருமானத்தையும் பெற்றுக் கொள்ளாது நடைமுறை கணக்கினுள் பேணிச் செல்லப்பட்ட காரணத்தால் சபைக்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்பட்ட வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(சீ) மட்டக்குளிய டிப்போவினால் மக்கள் வங்கியில் பேணிச் செல்லப்படும் நடைமுறை கணக்கிற்கு உரிய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக தயாரிக்கப்பட்ட வங்கி இணக்க கூற்றிற்கைய காசு புத்தகத்தின் வங்கி மீதியாக ரூபாய்.20,109,442 ஆன வங்கி மேலதிக பற்று காண்பிக்கப்பட்ட போதிலும் அது இறுதி கணக்குகளில் ரூபாய்.9,184,280 ஆன வங்கி மேலதிக பற்று மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் இறுதி கணக்குகளில் வங்கி மேலதிக பற்று மீதி ரூபாய்.10,925,962 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(சு) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியான இயந்திர உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், கணினி இயந்திரங்கள், பேருந்துகள், பயணச்சீட்டு இயந்திரங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களுக்கு உரியதாக இறுதி கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த மீதி ரூபாய்.13,615,181,245 ஆக காணப்பட்டதுடன் பட்டோலைகமைய்வான மீதி ரூபாய்.10,926,969,902 ஆனமையால் மீதிகளுக்கு இடையே ரூபாய்.2,688,211,342 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்ட போதிலும் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(சூ) ஹட்டன் டிப்போவில் ரூபாய்.14,969,516 பெறுமதியுடைய 533 டயர்கள் பின்காட் அட்டைகள் நாளதுவரையாக்கப்படாமை மற்றும் டயர்கள் முறையாக களஞ்சியப்படுத்தப்படாமையால் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட இருப்பு மீதி பௌதீக பரிசோதனையை செய்ய முடியாதிருந்தது.

(செ) 2021 ஆம் ஆண்டில் வாகன விபத்துகள் தொடர்பில் தொடரப்பட்டிருந்த 297 வழக்குகளில் 77 வழக்குகளுக்கான நட்டு ஈடாக ரூபாய்.11,832,191 ஆன தொகையும் தொழிலாளர் பிணக்குகள் தொடர்பிலான 22 வழக்குகளுக்கு உரிய முறையில் சமூகமளிக்காத காரணத்தால் தொடரப்பட்ட வழக்குகளில் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ தவறுகள் காரணமாக ரூபாய்.1,830,747 ஆன தொகை நட்ட ஈடாக

செலுத்துவதற்கும் சபையின் ஊழியர்களுக்கு பதவியிறக்கல் தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட வழக்குகளுக்கு 2,439,370 எனும் நட்டு ஈடு எனுமாறு ரூபாய்.16,102,308 கூட்டுத்தொகை செலுத்த வேண்டியிருந்தது. எனினும் இதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதிநிலைமை கூற்றில், விரிவான வருமான கூற்றில், உரித்துக்களிலான மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுன்மையான உருப்படிகள் மாற்று வழிமுறைகளின் மூலம் சான்றுபடுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்ய என்னால் முடியாதிருந்தது. இதனால் நிதிநிலைமை கூற்று, விரிவான வருமான கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றல்கள், காசுப் பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் உள்ள பெறுமதிகள் அல்லது உருப்படிகளின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கை இடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஏதேனும் சீராக்கம் மேற்கொள்ளப்படுதல் அவசியமானதா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாதிருந்தது.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் எனது பொறுப்பாகும். எவ்வாறான போதிலும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் இயலாதிருந்தது.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு சபையினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தனவா என்பதை தீர்மானிக்க என்னால் முடியாதிருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட பேரவையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் (அ), (ஊ), (க) மற்றும் (கெ) அவதானிப்புகள் நீங்கலாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே சபையினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் சபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

தொடர்பின் தன்மை	அவதானிப்பு
தொடர்புடைய தரப்பினர்	இலங்கை போக்குவரத்துச் சபையில் சேவையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரால் சபைக்கு ஒதுக்கப்பட்ட வாகன வாடகைக்கு வழங்கப்பட்ட நிறுவனத்தின் ஊடாக தனது தனிப்பட்ட வாகனத்தினை சபைக்கு வழங்கி அதற்காக மாதாந்த வாடகையாக ரூபா 39,850 படியாக 2020 சனவரி 22 ஆந் திகதி முதல் 2022 மே 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,116,331 ஆன தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் சபை இணங்கியொழுகாதுள்ளமையை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் கட்டளைகளுடனான தொடர்பு		அவதானிப்புகள்
(அ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாண கோவை	
i.	நிதிப்பிரமாணம் 105	ரூபாய்.1,041,195 கிரயமான சேதத்திற்கு உள்ளான மோட்டார் வாகனங்கள் தொடர்பில் மற்றும் 2022 மே 09 ஆம் திகதி இடம் பெற்ற கலவரங்களின் போது சேதத்திற்குள்ளாகிய பேருந்துகள் மற்றும் வாகனங்களின் பெறுமதியான ரூபாய்.12,136,724 ஆன தொகை தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
ii.	நிதிப்பிரமாணம் 225	அனைத்து கொடுப்பனவுகளுக்கும் தேவையான உறுதி சீட்டுக்கள் உரிய மாதிரி படிவங்களில் சரியாகவும் முழுமையாகவும் நிரப்பப்பட்டு கொடுப்பனவுகளு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் 2022 ஜுலை மாதம்

		07 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை உதிரி பாகங்கள் மற்றும் எரிபொருள் கொள்வனவுக்காக மட்டக்குளி டிப்போவின் மூலம் 14 காசோலைகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபாய்.25,588,202 ஆன தொகைக்காக சான்றுபடுத்தல்களுக்கு உரிய கொடுப்பனவு உறுதி சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
iii.	நிதிப்பிரமாணம் 387	எந்தவொரு அரச வங்கியிலும் வங்கி மேலதிகப்பற்றினை பெற்றுக்கொள்ளுதல் தடை செய்யப்பட்டுள்ள போதிலும் சபையினால் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபாய்.645,939,849 தொகையான வங்கி மேலதிக பற்றொன்று பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் அதற்கான வங்கி மேலதிக பற்று வட்டியாக மீளாய்வாண்டில் ரூபாய்.400,171 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.
iv	நிதிப்பிரமாணம் 395(இ)	வங்கி கணக்கு ஒன்று உள்ள எந்த நிறுவனத்தினாலும் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அதற்கடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 03 பிரதேச அலுவலகங்கள் மற்றும் 03 டிப்போக்களின் மக்கள் வங்கியினதும் இலங்கை வங்கிகளும் பேணிச்செல்லப்பட்டிருந்த 07 கணக்குகளுக்குரிய வங்கி இணக்கக்கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
v.	நிதிப்பிரமாணம் 395(ஈ)	2022 டிசம்பர் மாதம் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்க கூற்றுக்கமைய வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவுகளுக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபாய்.57,942,422 ஆன தொகைக்கு உரியதாக 12 டிப்போக்களில் காசு செலுத்தப்படாத காசோலைகள் தொடர்பிலான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
vi.	நிதிப்பிரமாணம் 396(அ)(i) மற்றும்(iii)	ரூபாய்.5,407,762 பெறுமதியான பின்வரும் டிப்போக்களுக்காக நிறுவனங்களில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட 163 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செல்லுபடியான காலம் 06 மாதங்களை விஞ்சிய டிப்போக்கள்/நிறுவனம்	காசோலைகளின் எண்ணிக்கை	பெறுமதி (ரூபா)
நுவடிரலியா	05	37,114
குளியாப்பிட்டிய	04	187,672
மட்டக்குளிய	02	525,012
பிரதேச அலுவலகங்கள் மற்றும் டிப்போக்கள்	139	1,906,117
கண்டி தெற்கு	01	2,237,831
ஊவா மற்றும் கொழும்பு பிரதேசத்திலுள்ள அலுவலகங்கள் மற்றும் டிப்போக்கள்	12	514,016
கூட்டுத்தொகை	**163**	**5,407,762**

(ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை

i. XXV ஆம் அத்தியாயத்தின் 5.2 மற்றும் 5.3 ஆம் பிரிவு

தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் சம்பளம் மற்றும் வாழ்க்கை செலவினப்படி அரசினால் செலுத்தப்படுவதுடன் அவர் அரச சேவை நலன்புரி நிதியத்திற்கு பங்களிப்பு செய்பவர் எனின் அரசின் பங்களிப்பு தொகையானது சங்கத்தினால் அரச சேவைகள் நலன்புரி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டும். எனினும் அந்தத் தொகை தொழிற்சங்கத்தினால் அல்லாது சபையினால் செலுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறான உத்தியோகத்தர் ஒருவருக்கு சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக சேவைக்காக ஏனைய எந்தவொரு உரித்தும் இல்லை என்ற போதிலும் 2022 டிசம்பர் மாதம் வரையிலும் 07 தொழிற்சார் சங்கங்களின் 28 உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு படிகள் மற்றும் மிகை ஊதியங்களாக முறையே ரூபாய்.1,053,100 மற்றும் ரூபாய்.10,661,547 எனுமாறு ரூபாய்.11,714,647

		கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது.
ii.	XXV அத்தியாயத்தின் 4.2 ஆம் பிரிவு	மேற்படி பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக சபையின் 05 தொழிசார் சங்கங்களுக்காக கூடுதலாக 12 உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர் ஒருவருக்கு 2006 ஆம் ஆண்டு முதல் சம்பளம் மற்றும் மிகை ஊதியமாக ரூபாய்.3,190,410 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த சங்கத்திலேயே மற்றும் ஒரு உத்தியோகத்தரும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவருக்கும் சம்பளம் மற்றும் மிகை ஊதியமாக ரூபாய்.772,938 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.
iii.	XXV அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு	செய்வதற்கு உரித்து காணப்படுவது இலவச புகையிரத பயணச்சீட்டு மற்றும் மத்திய போக்குவரத்துச் சபையின் இலவச பயணச் சீட்டின் ஊடாக மாத்திரம் ஆகும். அவ்வாறான போதிலும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக சபையினால் ஒதுக்கப்பட்டிருந்த 03 வாகனங்களுக்கு மற்றும் 03 தனிப்பட்ட வாகனங்களுக்கு 2022 ஆம் ஆண்டில் எரிபொருள் மற்றும் பழுதுபார்த்தல் செலவினமாக சபையின் பணத்திலிருந்து ரூபாய்.4,782,305 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது.
(இ)	2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை	கடமைகளுக்காக சேவைக்கு வருகை தரும் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல்களை உறுதிப்படுத்துவதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் தமது கடமைகளுக்கு மேலதிகமாக அழைப்பு கடமைகள் போன்ற திட்டவட்டமான பணிகளுக்காக அலுவலகத்திற்கு வருகை தரும் உத்தியோகத்தர்களும் அவர்களின் வருகையை கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். எனினும் தலைமை அலுவலகம், பிரதேச அலுவலகங்கள் மற்றும் டிப்போக்களின் 2019 ஆம் ஆண்டு முதல் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவு செய்வதற்கு கைவிரல் அடையாள இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளங்களை செலுத்தியமை

தொடர்பிலான சரியான தன்மை தொடர்பில் கணக்காய்வில் திருப்தி கொள்ள முடியாதிருந்தது. மேலும் தலைமை அலுவலகத்தில் உள்ள கைவிரல் அடையாள இயந்திரத்தினை பழுது பார்ப்பதற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபாய்.369,600 ஆன தொகையை செலவிடப்பட்டுள்ள போதிலும் அவற்றை தொடர்ந்தும் செயற்படு நிலைமையை உள்ளாக்கி இருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 1/2015

மேற்படி சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள அட்டவணையில் நாலாம் பிரிவிற்கு இணங்க 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இலக்கமும் MSD 30 இன் பிரகாரம் HM 1-1 தொகுதியில் அல்லது அதற்கு உயர்வாக அத்திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்றினை வகிக்கும் எந்தவொரு உத்தியோகத்தரும் தற்போதைய திருத்தத்திற்கு அமைய உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்துவதற்கு உரித்துள்ள எரிபொருளின் அளவானது 115 லிட்டர்கள் ஆன போதிலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள டிப்போக்களின் டிப்போ அதிகாரிகள் உள்ளடங்களாக உத்தியோகத்தர்கள் பயன்படுத்தும் வாகனங்களுக்கு 2022 ஆம் ஆண்டு முதல் குறித்து எல்லையினை விஞ்சி எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபாய்.2,747,405 ஆகும்.

பதவி	பெற்றுக்கொண்ட எரிபொருள் அளவு (லீட்டர்)	எல்லையினை விஞ்சி பெற்ற எரிபொருளின் அளவு (லீட்டர்)	பெறுமதி (ரூபா)
டிப்போ அதிகாரி (ஹட்டன்)	3,152	1,887	643,693
நிதி முகாமையாளர் (குரணாகலை)	3,090	1,825	614,224
டிப்போ அதிகாரி (கம்பஹா)	4,535	3,155	1,042,464
டிப்போ அதிகாரி	2,688	1,423	447,024

		(நாவலப்பிட்டிய)			
		மொத்தம்	**13,465**	**8,290**	**2,747,405**

உ.	1997 செப்டம்பர் 29 ஆம் திகதிய 15/97 ஆம் இலக்க நிர்வாக சுற்றறிக்கை	தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளுக்காக முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் 04 வருட காலத்தின் பின்னர் மீண்டும் முழுமையாக விடுவிக்கப்பட்டால் அதற்காக மாண்புமிகு அமைச்சரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 06 தொழிற்சங்கங்களுக்கு 04 வருடங்களை விஞ்சி 13 உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் அந்த சட்டத்திற்கு முரணாக முழு நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.
ஊ.	1983 இன் 12 ஆம் இலக்க மிகை ஊதிய கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் 6(2)(அ)	மாதாந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தர் ஒருவர் அவரால் இறுதியாக பெற்றுக்கொள்ளப்பட்ட மாதாந்த சம்பளத்தின் அறவிற்கமைய கணிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளத்தின் ஒரு பகுதி மிகை ஊதியமாக செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டிற்கு முன்னர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்காக மிகை ஊதியம் செலுத்தும் போது அவரால் இறுதியாக ஈட்டப்பட்ட முழுமையான சம்பளத்தினை ஆண்டுகளின் எண்ணிக்கையால் பெருக்கி மிகை ஊதியம் செலுத்தப்பட்டிருந்ததுடன் மிகை ஊதியம் செலுத்தும் போது ஊழியரால் இறுதித் திகதியில் ஈட்டிய மாதாந்த சம்பளம் சேவையாற்றிய வருடங்களின் எண்ணிக்கையால் பெருக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டினுள் ரூபாய்.319,689,152 ஆன தொகை மிகை ஊதியமாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.
எ.	2006 செப்டம்பர் 22 ஆம் திகதிய முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 30/2006	இலங்கை போக்குவரத்து சபை ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர் முகாமைத்துவம் ஆகியவற்றில் சேவையாற்றும் I தரத்திலிருந்து VIII தரம் வரையான உத்தியோகத்தர்களின் சம்பளம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 2/2016 சுற்றறிக்கையின் சம்பளத் தொகுதிக்கு அமைய 2018.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் திருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள போதிலும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் I தரம் முதல்

VIII தரம் வரையான 3050 உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் குறித்த படிமுறையில் வைக்கப்பட்டு திருத்தப்பட்டிராத காரணத்தால் சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்ட ரூபாய்.1,077,109,440 ஆன தொகையின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கமைய பின்வரும் அவதானிப்புகள் நீங்கலாக சபையின் சொத்துக்கள் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் உரிய காலத்தினுள் குறித்த சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது.

(அ) ஒறுகொடவத்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நிர்மாணத்திற்காக சபை 2018 மார்ச் 20 ஆம் திகதி தனியார் கம்பெனி ஒன்றுடன் ரூபாய்.61,014,316 பெறுமதியான உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்தது. உடன்படிக்கைக்கு அமைய நிர்மாண பணிகள் 2018 ஜூன் 30 ஆம் திகதி நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2023 மார்ச் வரையிலும் நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததுடன் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஒப்பந்ததாரருக்கு ரூபாய்.32,118,352 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் ஒப்பந்ததாரரால் உரிய முறையில் பணிகள் நிறைவு செய்யப்படாத காரணத்தால் உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றும் எஞ்சிய பணிகளுக்கான மதிப்பீடு ஒன்றும் தயாரிக்குமாறு மத்திய பொறியியல் பணியகத்திற்கு (CECB) குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் இந்த மதிப்பீட்டு அறிக்கை மற்றும் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனைகளில் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் கூரை முழுமையாக இற்றுப் போயிருந்தது உள்ளடங்களாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் உரிய நியமத்திற்கு அமைவாக அல்லாது கவனயீனமாகவும் திட்டமொன்று இல்லாமலும் மேற்கொள்ளப்பட்டு அவற்றுக்காக கொடுப்பனவுகள் பரிந்துரைக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் தற்போது சபைக்கு ரூபாய்.8,978,845 ஆன நட்டத்தினை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. அவ்வாறே 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபாய்.11,565,320 செலுத்தி கொண்டுவரப்பட்ட 07 டீசல் மற்றும் பெட்ரோல் பம்பிகள் மற்றும் ஜெனரேட்டர் ஒன்றும் பாதுகாப்பற்ற முறையில்

களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஜெனரேட்டரின் உத்தரவாத காலமும் நிறைவடைந்திருந்தது.

(ஆ) கம்பஹா டிப்போவினால் 2022 ஆகஸ்ட் மாதத்தினுள் ரூபாய்.83,862,900 கூட்டு பெறுமதியுடைய 13.200 லீட்டர்களை கொண்ட 12 பவுசர்களில் மற்றும் 6.600 லிட்டர்கள் படியான 06 பவுசர்களில் டீசல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த கொள்வனவுகளுக்கு உரியதாக வழங்கப்பட்ட கொடுப்பனவு உறுதி சீட்டுகளுக்கு உரிய பற்றுச்சீட்டுகளோ அவற்றின் பிரதிகளோ இணைக்கப்பட்டிராததுடன் அந்த உறுதிச் சீட்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முற்கொடுப்பனவு அட்டைகளை பயன்படுத்துதல் தொடர்பிலான தொழில்நுட்ப கட்டங்களின் இரண்டாவது கட்டம் அதாவது Back End (பணக்கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பிரவேசம் மற்றும் இணைக்கும் கட்டமைப்பு) அறிமுகப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டிற்காக ரூபாய்.250 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் போக்குவரத்துச் சபையின் தேவைக்கேற்ப தொழில்நுட்ப அமைப்பு குறிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உரிய முறையில் விக்கேள்வி கோரப்பட்டு அதற்காக வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிராததுடன் போக்குவரத்து ஆணைக்குழுவினால் விலை கேள்வி கோரப்பட்டு தேர்வு செய்யப்பட்ட வழங்குநர் ஒருவருடன் 2021 ஜூன் 29 ஆம் திகதி ஒப்பந்தத்திற்காக கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்கமைய முழு ஒப்பந்த பெறுமதியானது ரூபாய்.3,900,000 ஆகும். எனினும் அந்தத் தொகையில் ரூபாய்.1,500,000 கட்டமைப்பினை கொள்வனவு செய்தல் மற்றும் ஒரு வருட உத்தரவாத காலத்தின் பின்னர் அதற்கடுத்த வருடத்திற்கு ரூபாய்.800,000 படியாக 03 சேவை உடன்படிக்கைக்கு உள்ளாவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டம் நிறைவு செய்வதற்கு முன்னர் மென்பொருள் செயற்திட்டத்தின் தொகையான ரூபாய்.1,500,000 இற்கான கொள்வனவு கட்டளை ஒன்று வழங்கப்பட்டு அந்தத் தொகை 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும் இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான இலத்திரனியல் டிக்கெட் இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி ஏற்பாடு காணப்படாமை, பயன்படுத்தப்பட்ட அட்டைகளை நிலவும் நடைமுறை சிக்கல்கள் மற்றும் செயற்திட்டத்தில் உருவாகிய தொழில்நுட்ப சிக்கல்களின் அடிப்படையில் இந்த மென்பொருள் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு பெற்றுக்கொள்வதில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

03. ஏனைய முக்கியமான அவதானிப்புக்கள்

(அ) வ/ப புரவிடன் புறப்பட்டி லங்கா கம்பனிக்கு (Provident Property Lanka LTD) கையளிக்கப்பட்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான ரூபாய்.10,250,500,000 தொகையான காணிகளின் பெறுமதி ஊழியர் நலன்புரி

நிதியத்தில் முதலீடு செய்யப்பட்டு இலங்கை போக்குவரத்து சபைக்கு பணம் வழங்குவதற்கு 2016 ஜூன் மாதம் 07 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கம்பனியினால் அதற்கு உரிய பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இலங்கை போக்குவரத்து கம்பனியினால் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த அந்த காணி இலங்கை போக்குவரத்து சபைக்கு மீளப் பெற்றுக் கொள்வதற்கு 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த காணிதுண்டுகளிடையே சபையின் போக்குவரத்து பணிகளுக்கு அத்தியாவசியமான ஹஸ்பவ, ஹோமக, மஹரகம, மொரட்டுவ மற்றும் கட்டுபத்த டிப்போக்களுக்கு உரிய சுமார் 12.1566 ஹெக்டேயர்கள் மற்றும் பிலியந்தல பேருந்து நிறுத்தத்திற்கு உரிய சுமார் 0.3306 ஹெக்டேயர் காணியும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. தற்போது இந்த கம்பனி செயலிழந்துள்ளதாக கம்பனிகள் பதிவாளரின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய உறுதிப்படுத்தப்பட்டது. எனினும் 2023 ஜனவரி 23 ஆம் திகதிய அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய கம்பெனிக்கு கையளிக்கப்பட்டு இருந்த காணிகள் கோரிக்கை செய்த தரப்பினருக்கு சாட்டுவதற்கு காணிகளின் பெறுமதி இலங்கை போக்குவரத்துச் சபைக்கு செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட காரணத்தால் அந்த காணித் துண்டுகளை மீண்டும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சுவீகரித்தல் தொடர்பில் நிச்சயமற்ற நிலை ஒன்று உருவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2022 ஆம் ஆண்டில் ஊழியர்களின் கடமை சுழற்சிக்கமைய வவுனியா டிப்போவின் மூலம் 53 வீதிகளில் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பேருந்துகளின் நாளாந்தம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 34 ஆகும். இதன் பெறுபேராக 19 வீதிகளில் சேவை முடக்கப்பட்டு இருந்தது. போதிய சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் காணப்பட்ட போதிலும் தேவையான அறவிலான பேருந்துகள் காணப்பட்டதுடன் நாளாந்தம் ரூபாய்.200,000 ஆன வருமானம் ஈட்டும் வுனியாவில் இருந்து கொழும்பு வரை பயணிக்கும் 08 பயணத் தடவைகள் பொத்துவில் வரையிலான 02 பயணத் தடவைகள் மற்றும் வவுனியாவிலிருந்து கண்டி வரையிலான 02 பயணத் தடவைகளுக்காக பேருந்துகளை ஈடுபடுத்தி ஓட்டத்தில் சேர்க்காத காரணத்தால் 2022 ஆம் ஆண்டில் ரூபாய்.576 மில்லியனான மதிப்பிடப்பட்ட வருமானம் ஒன்று இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) சபையினால் 2022 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய நாளாந்தம் 5,794 பேருந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டிருந்தது. அப்பணியை நிறைவேற்றுவதற்கு தேவையான 840 எஞ்சின் தொகுதிகள் வருடாந்தம் பழுது பார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்கு திறைசேரி மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் நிதி ஏற்பாடு ரூபாய்.66,150 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் சபையினால் பழுது பார்க்கப்பட்டிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 254 ஆக காணப்படுவதுடன் அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபாய்.77.13 மில்லியன் ஆகும். அதற்கமைய எதிர்பார்த்த அடைவு இலக்கு 70

சதவீதம் எனும் குறைந்த அறவினை கொண்டிருந்தமையால் இலக்கிடப்பட்டவாறு பேருந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பழைய பேருந்துகளை பழுது பார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதனை நோக்காகக் கொண்டு குருநாகலை, யட்டிநுவர, கம்பஹா மற்றும் மல்லாகம் பிரதேசங்களின் வேலைத்தளங்களை மையப்படுத்தி பழைய 740 கியர் பெட்டிகள் பழுது பார்க்கப்பட்டு வாகன குழாம் ஓட்டத்தில் ஈடுபடுத்தக் கூடிய நிலைமைக்கு மாற்றுவதற்கு உற்பத்தி அலகிற்கு கிரயம் மற்றும் கிரயத்திற்கு 50 சதவீத இலாப எல்லையுடன் ரூபாய்.140.4 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு இருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டினுள் பழுது பார்க்கப்பட்ட கியர் பெட்டிகளின் எண்ணிக்கை 139 ஆக காணப்பட்டதுடன் அதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபாய்.18.12 மில்லியன் ஆகும். அதற்கமைய உத்தேச எல்லைகளின் அடைவானது 19 சதவீதம் ஆகும்.

(உ) வாகன குழாத்தினை ஓட்டத்தில் ஈடுபடுத்தக் கூடிய நிலைக்கு உள்ளாக்குவதற்கு திறைசேரி மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் நிதியேற்பாட்டினை ஈடுபடுத்தி பிராந்திய வேலைத்தளங்கள் மற்றும் டிப்போக்களின் மூலம் 300 பேருந்து போட்கள் பழுது பார்ப்பதற்கு 2022 ஆம் ஆண்டினுள் ரூபாய்.238.5 மில்லியன் மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் பழுது பார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 180 மாத்திரம் ஆகும்.

(ஊ) பேருந்தின ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு தேவையான டயர் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு அம்பாறையில் நிறுவப்பட்டுள்ள முற்பொருத்தக் கூடிய டயர் தொழிற்சாலை மூலம் வருடாந்தம் 14,400 முற்பொருத்தும் டயர்கள் மற்றும் ரூபாய்.7,861 எனும் டயர் ஒன்றின் மதிப்பிடப்பட்ட அலகு கிரயத்தில் உற்பத்தி செய்வதற்கு மீளாய்வாண்டில் திறைசேரி மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ரூபாய்.113.20 மில்லியன் நிதியினை ஒதுக்கீடு செய்திருந்த போதிலும் ரூபாய்.107.64 மில்லியன் செலவிடப்பட்டு 8,997 டயர்கள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான டயர் ஒன்றின் உற்பத்தி கிரயம் ரூபாய்.11,964 ஆனமையால் உற்பத்தி செய்யப்பட்ட டயர்களுக்காக மதிப்பிடப்பட்டு கிரயத்தினை விஞ்சி ரூபாய்.36,914,691 கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது.

(எ) 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய பழைய பேருந்துகளை பழுது பார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதனை நோக்கமாகக் கொண்டு 2040 பழைய ஸ்டார்டர் மோட்டார்கள், 1200 பழைய டில்டநேட்டர்கள், 1080 எரிபொருள் பம்பிகள் மற்றும் 3000 எண்ணிக்கையான எரிபொருள் விதிப்புகளை பழுது பார்ப்பதற்கு மீளாய்வாண்டினுள் ரூபாய்.180 மில்லியன் ஆன மதிப்பீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபாய்.10.36 மில்லியன் செலவிடப்பட்டு 2022 ஆம் ஆண்டில் 14 ஸ்டார்ட்டர் மோட்டார்கள், 409 எரிபொருள் பம்பிகள் மற்றும் 1760 எரிபொருள் விதிப்புகள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் இந்த உதிரிப்பாகங்களை பழுது பார்த்து பயன்படுத்தும் இயலுமை சபைக்கு உள்ள போது அவற்றை பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ளாது வெளிவரியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதற்காக

மீளாய்வாண்டினுள் சபையின் 04 வலயங்களில் மாத்திரம் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபாய்.1,205,210 என்பது அவதானிக்கப்பட்டது.

(ஏ) 2022 ஆம் ஆண்டினுள் இலங்கை போக்குவரத்துச் சபையின் உள்ளக மனித ஊழியம் அல்லது வெளிவாரி நிறுவனங்களின் மூலம் தலைமை அலுவலகம் உள்ளடங்களாக 106 டிப்போக்கள் மற்றும் 160 பல்வேறு அலுவலகங்களுக்காக ரூபாய்.142.04 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அப்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஐ) பேருந்துக்களுக்கு தேவையான எரிபொருளை வழங்கும் போது சாரதியினால் சமர்ப்பிக்கப்படும் சம்பவ குறிப்பு புத்தகங்களில் குறித்த பயணத்துடனான அதற்குத் தேவையான எரிபொருள் அறவினை குறிக்க வேண்டியதுடன் எரிபொருள் வழங்கப்படும் உத்தியோகத்தரால் குறித்த சம்பவக் குறிப்பு புத்தகத்தின் குறிப்பிடப்பட்ட அளவுக்கமைய இர-08 பாத்திரத்தில் பேருந்துக்கு பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவு மற்றும் பேருந்தின் இலக்கம் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும் மஹரகம மற்றும் கம்பஹா டிப்டீபான்னளில் 2022 ஆகஸ்ட் மாதத்தினுள் சம்பவ குறிப்பு புத்தகங்களில் பதிவு செய்யப்படாத ரூபாய்.11,752,880 பெறுமதியான 27,318 லிட்டர் எரிபொருள் இர-08 பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டு பேருந்துக்களுக்கு வழங்கப்பட்டதாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) மஹரகம டிப்போவில் 2022 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் இறுதி திகதியில் பேணப்பட வேண்டிய எரிபொருளின் அளவு 326,772 லிட்டர் ஆகும். எனினும் அத் திகதியில் எரிபொருள் கொள்கலன்களில் காணப்பட்ட உள்ளபடியான எரிபொருள் இருப்பு 48,598 லிட்டர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபாய்.119,614,820 பெறுமதியான 278,174 லிட்டர் எரிபொருள் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டதுடன் அப் பற்றாக்குறைக்கு உரிய காரணங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. இவ்வாறு பேணப்படும் எரிபொருள் இருப்பு பற்றாக்குறைக்காக சபையினாலும் மீளாவாண்டின் கணக்குகளில் ரூபாய்.36,799,884 ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே மஹரகம டிப்போவில் 2023 பிப்ரவரி 28 ஆம் திகதி நாளாந்தம் சேர்க்கப்படும் பணத்தை காப்பறையில் வைப்பு செய்திருந்தத்துடன் 2023 மார்ச் 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக பண பரிசோதனையில் காப்பறையில் காணப்பட்ட தொகையில் ரூபாய்.63,510 ஆன பற்றாக்குறையொன்று வெளிப்படுத்தப்பட்டது.

(ஓ) மீளாய்வாண்டில் நுவரெலிய டிப்போவில் இடர் மீட்பு வாகனம் ஒன்றுக்காக அசாதாரணமான முறையில் ரூபாய். 1,756,902 பெறுமதியான 4,841 லிட்டர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த இடர் மீட்பு வண்டியில் மைலோ மீட்டர் ஆனது செயலற்று காணப்பட்டமையால் மற்றும P-II பதிவேடு உரிய முறையில் பராமரிக்கப்படாமல் செய்வேலை மற்றும் பயணம் செய்த இடங்கள் தொடர்பிலும் எரிபொருள் நுகர்வு தொடர்பிலும் உரிய விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாத

காரணத்தால் மேற்படி எரிபொருள் பாவனையை கணக்காய்வில் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

(ஔ) அவிசாவல டிப்போவில் தொடர்ச்சியாக எரிபொருள் கடனுக்கு வழங்கியமையால் 13 டிப்போக்களில் இருந்து, 05 பிரதேச அலுவலகங்களில் இருந்து தலைமை அலுவலகத்தில் மற்றும் ரூஹுணு பஸ் கம்பெனியின் தலைமை அலுவலகத்திலிருந்து ரூபாய்.16,758,304 ஆன தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. நிலுவை பணம் அறவிடப்பட உள்ளபோது தொடர்ச்சியாக கடனுக்கு எரிபொருள் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் குறித்த கடன் தொகையை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(க) கட்டுபத்த அதிசொகுசு சுற்றுலா போக்குவரத்து சேவைக்கு உரிய ரூபாய்.10,800,000 பெறுமதியான அதி சொகுசு பேருந்து ஒன்று அதிவேக பாதையில் விபத்திற்குள்ளாகி பழுது பார்க்கப்படாது ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அதற்காக முழுமையான காப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருந்த காலத்தினுள் பேருந்திணை பழுது பார்ப்பதற்கு டிப்போ அதிகாரி தவறி இருந்தமையால் சேதத்தை மீளளிக்கும் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

(கா) அனைத்து டிப்போக்களினாலும் மிகை ஊதியம் கொடுப்பனவு நாளாந்தம் கிடைக்கும் வீதி பதிவேற்று வருமானத்தில் ரூபாய்.20,000 அல்லது ரூபாய்.30,000 ஆக ஒதுக்கம் ஒன்று மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய பரிசோதனைக்குள்ளாக்கப்பட்ட களுத்துறை பிரதேச அலுவலகத்தின் அவ்வாறு சேகரிக்கப்பட்ட ரூபாய்.50,065,000 ஆன தொகை 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக அவர்களின் நடைமுறை கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(கி) 2018 ஆம் ஆண்டில் ஓட்டத்தின் ஈடுபடுத்தப்பட்ட 446 கிலோமீட்டர்களுக்கு உரியதாக செலுத்தப்பட்டுள்ள மொத்த மேலதிகநேர செலவினம் ரூபாய்.283 மில்லியன் ஆவதுடன் அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட ஒரு கிலோமீட்டருக்கான மேலதிக நேர செலவினம் 60 சதவீதம் ஆகும். 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலும் சம்பளத்தின் பெறுமதியானது 100 சதவீதத்தினால் அதிகரித்த காரணத்தால் அதற்கமைவாக மேலதிகநேர செலவினம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட கிலோமீட்டர் ஒன்றிற்கு ரூபாய்.1.20 ஆக காணப்பட வேண்டியதுடன் அதற்கமைய 2022 ஆம் ஆண்டில் மேலதிகநேர செலவினம் ரூபாய்.566 மில்லியனை விஞ்சலாகாது. எனினும் 2022 ஆம் ஆண்டில் மேலதிக நேர செலவினம் ரூபாய்.3,074 மில்லியன் ஆனமையால் கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள மேலதிக நேர செலவினம் ரூபாய்.2,508 என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய மேலதிக நேரம் கொடுப்பனவுகளின் வெளிப்படையற்ற தன்மை தொடர்பில் மேலதிகநேர கொடுப்பனவின் கட்டுப்பாடு தொடர்பில் முகாமைத்துவம் தமது பொறுப்பினை உரிய முறையில்

நிறைவேற்றியிருக்கவில்லை என்பதும் கைவிரல் அடையாள இயந்திரம் செயலிழப்பதற்கு இடமளித்தமை மேலதிகநேர செலவினத்திற்கு நேரடியாக தாக்கம் அளித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

(கீ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ஏனைய பெற வேண்டிய வருமானமாக சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த ரூபாய்.1,549,623,472 தொகை போலீஸ் அனுமதிப்பத்திர மீதியினுள் 10 வருடங்களை விஞ்சிய ரூபாய்.44,957,258 தொகையும் 5 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபாய்.91,395,964 ஆன மீதியும் 02 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபாய்.120,493,842 ஆன மீதியும் காணப்பட்ட போதிலும் அம் மீதிகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான ரூபாய்.2,063,693,707 பெறுமதியான 433 குத்தகை பேருந்துகள் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ள படியாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டு இருந்ததுடன் அவற்றுள் ரூபாய்.1,952,651,849 கிரயமான 409 பேருந்துகள் உரிய பிரதேச மற்றும் டிப்போக்களில் இனங்காணப்பட்டிராதத்துடன் ரூபாய். 96,896,702 கிரயமான மேலும் 21 பேருந்துகள் எந்த டிப்போவிற்கு உரியது என்பது இனங்காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந்த பேருந்து மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பதிவு இலக்கம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) வசதிகள் மற்றும் தரம் உயர்த்துதல் மூலம் கிரயத்தினை கட்டுப்படுத்துவதினை நோக்காக கொண்டு உயர் இயலளவு உடனான நவீன இயந்திர உபகரணங்களை கொண்டமைந்த டயர்களை பொருத்தும் தொழிற்சாலை ஒன்றினை நவீன மயப்படுத்துவதற்கு 2022 ஆம் ஆண்டினுள் ரூபாய்.50 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபாய்.69.4 மில்லியனாக காணப்பட்டது. அவற்றில் தற்போது காணப்படும் உற்பத்திக் கூடத்தின் இயலளவான 15,000 அலகுகள் வரை இருமடங்காக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த தொழிலினை நிறைவேற்றாத காரணத்தால் மீளாய்வாண்டினுள் சபையின் 06 வலயங்களில் இருந்து மாத்திரம் ரூபாய்.786,866,930 பெறுமதியான பொருத்தக்கூடிய டயர்கள் 53,706 கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் தொழிற்சாலையின் உற்பத்தி இயலளவினை உச்ச அளவில் பயன்படுத்தி டயர்களை முற்பொருத்துவதற்கு இயலுமான போதிலும் குறித்த பிரதேச மற்றும் டிப்போக்களில் இருந்து முற்பொருத்துவதற்கு தேவையான டயர்கள் தொழிற்சாலைக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கெ) மிகை ஊதிய அதிகார சட்டத்திற்கமைய சேவையிலிருந்து விலகிச் சென்ற ஊழியர்களுக்கு அவர்களுக்கு உரிய மிகை ஊதிய தொகை கணிப்பிடப்பட்டு அவர்கள் விலகிச் சென்ற திகதியிலிருந்து ஒரு மாதம் கடப்பதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். எனினும் அவ்வாறு ஒரு மாதத்தினுள் உரிய முறையில் செலுத்தப்படாத

காரணத்தால் மீளாய்வாண்டினுள் மிகை கட்டணமாக ரூபாய்.8,081,797 செலுத்தப்பட்டிருந்தது.

(கே) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளபடியாக ரூபாய்.10 மில்லியனை விஞ்சிய 04 வங்கி நடைமுறை கணக்குகள் கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டதுடன் எந்த வட்டி வருமானத்தினை பெற்றுக் கொள்ளாது நடைமுறை கணக்குகளில் ரூபாய்.624,588,024 பெறுமதி பேணிச்செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(கை) சபையினால் மாகாண மட்டத்தில் 09 கழிவு புகைப்பரிசோதனை நிலையங்களை நிர்மாணிப்பதற்கு உரிய உபகரணத் தொகுதிகள் 2018 ஏப்ரல் 26 ஆம் திகதி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கழிவு புகை நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக அந்நிதியத்திலிருந்து ரூபாய்.22 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த கழிவு புகை பரிசோதனை நிலையங்களுக்கு உரிய சிவில் பணி நிர்மாணங்களுக்காக ரூபாய்.89.84 மில்லியன் மதிப்பிடப்பட்ட தொகையில் 2022 செப்டம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபாய்.27.96 மில்லியன் பணம் செலவிடப்பட்டிருந்தது. இந்த 09 கழிவுப் புகை பரிசோதனை நிலையங்களின் தளம் அஸ்பலட் இடப்பட்டு காபட் இடுவதற்காக 2018 ஆகஸ்ட் 16 ஆம் திகதி ரூபாய்.49.9 மில்லியனுக்கு மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண கம்பனி மற்றும் போக்குவரத்துச்சபை உடன்படிக்கை கைசாதிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக செலவிடப்பட்ட தொகை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. தற்போது இந்த கழிவு புகை பரிசோதனை நிலையம் செயல்படுத்தப்படாததுடன் கழிவு புகை நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபாய்.22 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் துரப்பிடித்தவாறு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த கழிவுப் புகை பரிசோதனை நிலையத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் ஏனைய பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் உபகரண தொகுதியுடன் வழங்கப்பட்ட கணினிகள் ஏனைய பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய செலவிடப்பட்ட ரூபாய்.49.96 மில்லியன் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஏனைய செலவினங்களும் விலைவற்ற செலவினமாகி இருந்தன.

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.